கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

(02.06.2019 - 02 ஆனி 2019 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 09, கதிர் - 209, 16 பக்கங்கள் ரூபா: 50.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD /49 / NEWS / 2019

# ஞான ஒளி

ඥාන ඕලි GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி – 05

## திருத்தந்தையின் இம்மாத கருத்து

அருள்பணியாளர்கள் தங்கள் தன்னடக்க, தாழ்ச்சி நிறைந்த வாழ்வால் ஏழை மக்களுடன் தோழமை கொள்ள, தங்களை அர்ப்பணிக்கும்படி வேண்டுவோம்.

# நற்செய்தி அறிவிப்பு பேராயத்தின் தலைவர் கர்தினால் பெர்னாண்டோ பிலோனி ஆண்டகையின் இலங்கை வருகை.



பாஸ்கா ஞாயிறன்று தாக்குதல்களில் உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு திருத்தந்தையின் சார்பில் அனுதாபங்களையும், செபங்களையும் பிலோனி ஆண்டகை மக்களை நேரில் சந்தித்து தெரிவித்தார்.

ஆண்டகை கடந்த 22ம் திகதி புதன்கிழமை இலங்கையில் மூன்று நாள் மேய்ப்புப்பணி பயணத்தை மேற்கொண்டார். இதற்கிணங்க கர்தினால் ஆண்டகை 22ம் திகதி புனித அந்தோனியார் ஆலயத்தை பார்வையிட்டார். அங்கு உயிரிழந்த பலரது உறவினர்களையும் சந்தித்தார். அவர்களுக்கு திருத்தந்தையின் அனுதாபச் செய்தியையும் செபங்களையும் தெரிவித்து பேசினார். அன்று புனித அந்தோனியார் திருத்தல மறுசீரமைப்பு பணிகளுக்கு, கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை அடிக்கல் நாட்டிய நிகழ்விலும் கலந்துகொண்டார். அதுபோன்று 23ம் திகதி நீர்கொழும்பு, கட்டுவாப்பிட்டிய புனித செபஸ்தியார் ஆலயத்திற்குச் சென்ற கர்தினால் பிலோனி ஆண்டகை, கோவிலில் தாக்குதலில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்ததோடு, அப்பகுதியின் கல்லறையில் கட்டப்படவிருக்கும் ஒரு சிற்றாலயத்திற்கு அடிக்கல் நாட்டும் நிகழ்விலும் கலந்து கொண்டார். வைகாசி 24, அன்று கர்தினால் பிலோனி ஆண்டகை, இலங்கையின் அரசு, மற்றும் சமுதாயத் தலைவர்களையும், கொழும்பு உயர்மறைமாவட்ட அருள்பணியாளர்களையும், துறவியரையும் சந்தித்தார்.

**தகவல் : T. சுனில் பர்னாந்து**

## கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தல மீள்அர்ச்சிப்பும், திருவிழா திருப்பலியும்.



கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலத்தின் மீள் அர்ச்சிப்பு வழிபாடு ஆனி மாதம் 12ம் திகதி மாலை 5.00 மணிக்கும், அடுத்தநாள் 13ம் திகதி காலை 10.00 மணிக்கு மும்மொழிகளிலும் திருவிழாத் திருப்பலி பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் நடைபெறும்.

இவ்வருடம் கொடியேற்றம், நவநாட்கள், திருச்சுரூபப் பவனி ஆகியவை இடம்பெறமாட்டாது. பாதுகாப்பு கடமைகளின் போது முழுமையான ஒத்துழைப்பை வழங்குமாறு மக்களிடம் கேட்டுக்கொள்கின்றேன்.

**தகவல் : அருட்பணி. ஜூட்ராஜ் பர்னாந்து. ஆலய பரிபாலகர்**



கொழும்பு உயர் மறைமாவட்டதின் விஷேட குருக்கள் ஒன்றுகூடல் ஒன்று ஆயர் இல்லத்தில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் விசேட விருந்தினராக திருத்தந்தையின் பிரதிநிதி அதிமேதகு. கலாநிதி பெர்னாண்டோ கர்தினால் பிலோனி ஆண்டகையுடன் கொழும்பு பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை, துணை ஆயர்களான மேதகு. மக்ஸ்வல் சில்வா ஆண்டகை, மேதகு. ஜே.டி.அந்தனி ஜயகொடி ஆண்டகை ஆகியோரும் கலந்துகொண்டனர்.

**தகவல் : T. சுனில் பர்னாந்து**

## பேராயருக்கு அமைதிக்கான விருது

### சத்ய கவேசனய அமைப்பினரால் வழங்கப்பட்டது



சித்திரை மாதம் 21ம் திகதி உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலின் பின்பு தொடர்ந்து வந்த காலங்களிலும் சமாதானமான அமைதியான நிலையை நாட்டினுள் தோற்றுவித்த...

தொடர்ச்சி 15ம் பக்கம்..

## திருத்தந்தையின் றமழான் வாழ்த்துச் செய்தி

**அன்பார்ந்த இஸ்லாம் சகோதர சகோதரிகளே,**

நோன்பு, செபம் மற்றும் தர்மம் செய்தல் ஆகியவற்றிற்கான அர்ப்பணிப்புடன் றமழான் மாதம் இஸ்லாம் - கிறிஸ்தவ ஆன்மீக நட்பில் உறவை பகிர்ந்து வாழும் மாதமாக அமைகிறது. ஆகவே அமைதியும், சமாதானமும் நிறைந்த றமழான் கொண்டாட்டத்தில் வாழ்த்துவதை முன்னிட்டு நான் பெருமையடைகின்றேன்.

நம்முடைய மதங்கள் இரண்டும் சமாதானத்தின் மதிப்பில் வேரூன்றி இருக்கவேண்டும். பரஸ்பர புரிந்துணர்வு, மனித சகோதரத்துவம், மற்றும் இணக்கமான சக வாழ்வு ஆகியவற்றின் மதிப்புகளை பாதுகாக்க ஞானம், நீதி, அன்பு ஆகியவற்றை மீண்டும் நிலைநாட்டவும் இஸ்லாமியரும் கிறிஸ்தவர்களும் மற்றவர்களுக்கு நம்மை திறக்க அழைக்கப்படுகின்றார்கள்.

இஸ்லாம் மற்றும் கத்தோலிக்கரான நாம், எம்மை பிறருக்கு ஒளியாக்கி சகோதர சகோதரிகளாக எம்மை அடையாளம் காணுவோம். இவ்வாறு பயத்தினாலும், அறியாமையினாலும் எழுப்பப்பட்ட தடைச்சுவரை உடைத்தெறிந்து முழு மனித சமுதாயத்துக்கும் அத்தியவசியமான நட்பு பாலம் ஒன்றை அமைப்போம். இதன் மூலம் வன்முறை நிராகரிக்கப்பட்ட மனிதம் மதிக்கப்படும் ஒரு புதிய வாழ்க்கை கட்டி எழுப்புவோம்.

இவ்வாறு நம் குடும்பங்கள் மற்றும் அரசியல் சிவில் மற்றும் மத நிறுவனங்கள் வன்முறை நிராகரிக்கப்படும் ஒரு புதிய வாழ்க்கை மனித நபர் மரியாதையை உருவாக்கிக் கொள்ளலாம். இத்தகவல் சமாதானத்தின் ஒரு அறிகுறியாக அதிகாரத்தில் இருப்போரின் உள்ளங்-களிலும் முழு மனித குலத்தின் உள்ளங்களிலும் பதிந்து எம்மை வெறுமனே பொறுத்துக் கொள்ள வழிகாட்டாமல் உண்மையான சமாதானத்தில் வழிகாட்ட வேண்டும் என்பது என் விருப்பமாகும்.

உளம் கனிந்த நட்புடன் பயனுள்ள மாதமான றமழானுக்கு எனது வாழ்த்துக்கள் 'ID a;-Fibr"

**வத்திக்கானிலிருந்து 29 பங்குனி, 2019**

**இம்மாதம் இரண்டாம் திகதி தொடக்கம் சகல பங்குகளிலும் மறைப்பாடசாலையை ஆரம்பிக்குமாறு மறைக்கல்வி நடுநிலையம் அறிவிக்கின்றது.**

## ஹுணுப்பிட்டி கங்காராம விகாரையின் வண.இறிந்தே அஸ்ஸஜி அவர்களின் நிதியுதவி

வெசாக் பௌர்ணமி நிமித்தம் கொழும்பு ஹுணுப்பிட்டி கங்காராம விகாரையில் வருடாந்தம் நடைபெறும் வெசாக் வைபவங்களை நிறுத்தி, அதற்கான நிதியை, பாஸ்கு ஞாயிறில் நிகழ்ந்த அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பகிர்ந்தளிக்குமுகமாக, கொழும்பு பேராயர் அதிமேதகு. மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையிடம் கையளிக்கப்பட்டது.

15



**ஆண்டவரே உம் ஆவியை அனுப்பி மண்ணகத்தின் முகத்தை புதுப்பிக்கின்றீர். (தி.பா 104)**

# "செபமாலை ஆயுத்ததை" தூக்கும் மரியாயின் சேனையினர்



"செபமாலை ஆயுதத்தினை" தூக்கி உச்சரிக்கவிருக்கும் யட்டிந்தோட்டை மரியாயின் சேனை அங்கத்தவர்கள் நாட்டின் அமைதி, சகவாழ்வு, சமாதானத்திற்காக பிரார்த்தனை, மௌனவிரதம், செபமாலை உச்சரிப்புக்களை மே மாதம் முழுவதுமாக தங்களது வீடுகளிலும், ஆலயத்திலும் தினந்தோறும் ஓப்புக்கொடுக்க தீர்மானித்துள்ளனர்.

"உயிர்த்த ஞாயிறு அனர்த்தத்தின்" பின்பு நாட்டில் ஏற்பட்டுள்ள பதற்றங்கள் நீங்கி நாடும் நாட்டு மக்களும் நிலையான அமைதி, சமாதானத்துடன் வாழவும் பாதிக்கப்பட்ட மக்களுக்காகவும் இறைஆசி வேண்டி ஆன்மீக நிகழ்வுகள் மேதினவிழாவுடன் இனைந்ததாக யட்டியாந்தோட்டை மரியாயின் சேனையினரால் புனித மரியாள் தேவாலயத்தில் மேதினத்தன்று காலை 8.00 மனிக்கு அமைப்புபடுத்தப்பட்டிருந்தது.

உழைப்பாளர்களின் காவலாரான புனித சூசையப்பரின் திருவிழாவுடன் ஆரம்பமாகும் மேதினம் தேவமகன் இயேசுவின் தாயாரான மரி அன்னைக்குரிய மாதத்தின் ஆரம்பநாள் நவநாள் வழிபாடுகளும் திருப்பலியும் இடம்பெற்றதுடன் நாட்டின் அமைதி, சமாதானம், சகவாழ்விற்கான "மௌனவிரதம்" ஆன்மீக நிகழ்வுடன் இணைந்ததாக நடைபெற்றது. திருப்பலி பங்கு குரு அருட்தந்தை டேமியன் பெர்னாண்டோ அடிகளாரால் தலைமையிலும் "மௌனவிரத" ஆன்மீக நிகழ்வுகள் மரியாயின் சேனை இணைப்பாளர் எஸ்.பி.அந்தோனிமுத்து தலைமையிலும் இடம்பெற்றது.

மௌனவிரதத்தை நிறைவு செய்து வைத்து பேசிய எஸ்.பி.அந்தோனிமுத்து நாட்டில் இன்று ஏற்பட்டுள்ள பதற்றம், அமைதியின்மை நீங்கி மக்களைனவரும் மன நிம்மதியுடன் வாழவும் தேவ அன்னைக்குறிய மாதமான மேமாதம் முழுவதும் அன்னையின் செபமாலையை ஆயுதமாக தூக்கி நாள்தோறும் செபமாலையை உச்சரிப்பதுடன் திருப்பலிகளையும் தொடர் பிராரத்தனைகளையும் நடாத்துமாறு கேட்டுக்கொண்டார். இதற்கிணங்க இடம்பெற உள்ள ஆன்மீக வழிபாடுகளை மே மாதம் 31ம் திகதிவரை தொடர்ந்து நடாத்தவும் 31ம் திகதி புனிதமரியாள் தேவாலயத்தில் விசேட திருப்பலி, அன்னையின் திருச்சுரூப சமாதான பவனியும் நடாத்தபட உள்ளதாக யட்டியாந்தோட்டை மரியாயின் சேனை தலைவி அ. திரேசாமேரி தெரிவித்தார்.

**தகவல் : தலைவி அ. திரேசாமேரி**

## இலங்கை ஆயர் பேரவையின் வெசாக் செய்தி – 2019

இவ்வாண்டு வெசாக் போயாவில் புத்தபெருமானின் மும்மத நினைவுக் கொண்டாட்டமானது ஓர் அசாதாரண அச்ச சூழலில் கொண்டாடப்படுகிறது. பௌத்தர்கள், பௌத்தம் அல்லாதவர்கள் உயிர் பயம் நிறைந்த உணர்வுகளுடன் பாதிக்கப்பட்டுள்ளனர். வெசாக் காலமானது புத்த பெருமானின் கொள்கைகளை தியானிப்பதற்கு நல்ல மனப்பான்மை கொண்ட மனோபாவங்களை மனதில் நிரப்புவதற்கான காலமாகும். சித்திரை 21 ஞாயிற்றுக்கிழமை பாஸ்கா தினத்தில் நடந்த குண்டுத்தாக்குதலானது கிறிஸ்தவ மதத்தவரை ஆழ்ந்த துன்பத்தில் மூழ்கடித்துள்ளது. மக்கள் இன்னமும் அவ்வச்ச உணர்வு நிலையில் இருந்து அமைதியான, சமாதான வாழ்விற்கு திரும்பவில்லை.

புத்தபெருமானைப் போலவே இறைமகனாகிய இயேசுகிறிஸ்துவும் இவ்வுலகிற்கு அன்பைப்பற்றிய புதிய புரிதலைக் கொண்டு வந்தார். இயேசுகிறிஸ்துவின் வாழ்வு மற்றவர்களுக்கு பலியாக அமைந்தது. அவருடைய போதனையின் பொருள் மற்றவருடைய தியாகம் நமக்கானதல்ல மாறாக நம்முடைய தியாகம் மற்றவர்களுக்கானது என்பதை சுட்டிக்காட்டுகின்றது.

புத்த பெருமானினதும் இயேசுகிறிஸ்துவினதும் போதனைகள் கடந்த 2000 ஆண்டுகளாக அச்ச உணர்வை ஏற்படுத்தவில்லை. மாறாக அவர்களுடைய போதனைகள் கருணை, அன்பு, தயை, காருண்யம் கொண்டதாக அமைந்தன. இவ்வெசாக் காலத்தில் நாம் மதத்திற்கும் கோட்பாட்டிற்கும் இடையிலான வேறுபாட்டை தெரிந்து கொள்ள வேண்டும் உட்புற கருப்பொருள் இல்லாத ஒரு மதத்தில் எந்த பெறுமதியும் இல்லை. மனிதருக்கு இடையில் நம்பிக்கைகள், தத்துவக் கோட்பாடுகள் அடிப்படையில் வேறுபாட்டை உணர்த்தும் ஆன்மீகமற்ற மதத்தினால் என்ன பயன்? புத்தபெருமான் கூறியதுபோல் "தூய போதனைக்கு உண்மையானவர் யாரோ, அவர் அதை பாதுகாப்பார்" என்பதற்கமைய வெசாக் காலத்தில் மட்டுமல்லாமல் எல்லாக்காலத்திலும் அப்போதனை எல்லோருடைய வாழ்விலும் வாழ்வாகட்டும்.

மேதகு ஆயர் J. வின்ஸ்டன் எஸ். பர்னாந்து, SSS,
தலைவர்
இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை

மேதகு ஆயர் டி. வலன்ஸ் மென்டிஸ்
பிரதம செயலாளர்
இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை



புனித ஜோன் முதலுதவி குழுவினால் கொழும்பு டிலாசால் கல்லூரியில் கிட்டி அமைப்பு ஆரம்ப நிகழ்வு



கொழும்பு 15, டிலாசால் கல்லூரியின் வருடாந்த இல்லங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி சுகததாச விளையாட்டரங்கில் நடைபெற்ற வேளையில் பிரதான அதிதியாக வடகொழும்பு வட்டாரக் கல்வி அதிகாரி நில்மினி பெரேராவை கல்லூரியின் அதிபர் நியூமன் முத்துத்தம்பி அடிகளார் மற்றும் பிரதி அதிபர் வண. ஷெராட் ஜெயவர்மா அடிகளார் வரவேற்று அழைத்துச் செல்வதை காணலாம்.



கொழும்பு 15, டிலாசால் கல்லூரியின் 2019ம் ஆண்டுக்கான இல்லங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியின் இறுதி நிகழ்வாக ஒலிம்பிக் கொடியை கல்லூரியிடம் ஒப்படைக்க இல்ல தலைவர்கள் எடுத்து வருவதைக் காணலாம்.

**தகவல் : அருட்பணி. நியூமன் முத்துத்தம்பி அடிகளார்**

## ஆயர் திருநிலைப்படுத்தல் ஆண்டுவிழாவும், பெயர்கொண்ட நாளும்




**கொழும்பு உயர்மறைமாவட்ட ஆயர். மேதகு J.D அந்தனி ஆண்டகை. தனது பெயர் கொண்ட திருநாளையும் (13.06) ஆயர் திருநிலைப்படுத்தலின் 1ம் ஆண்டையும் (23.06.2019) நினைவுகூறுகின்றார்.**



**அனுராதபுர மறைமாவட்ட ஆயர். மேதகு நோபர்ட் M. அந்திராடி ஆண்டகை தனது பெயர்–கொண்ட திருநாளை (06.06) நினைவுகூறுகின்றார்.**



**பதுளை மறைமாவட்ட ஆயர் மேதகு வின்சன்ட் பர்னாந்து ஆண்டகை தனது ஆயர் திருநிலைப்படுத்தல் (14 ஆனி 1997) நினைவுகூறுகின்றார்.**



**குருனாகல் மறைமாவட்ட ஆயர் மேதகு ஹரல் அந்தனி ஆண்டகை தனது பெயர்கொண்ட திருநாளை 13.06.2019 அன்று நினைவுகூறுகின்றார்.**

**தமது ஆயர் திருநிலைப்படுத்தலின் நினைவு நாளையும், பெயர்கொண்ட திருநாளையும் கொண்டாடும் ஆயர்கள் அனைவரையும் உடல் உள சுகத்தோடு தமது ஆயர்த்துவ பணியை தொடர்ந்திட ஞான ஒளி செபத்தினூடாக வாழ்த்துகின்றது.**

# மன்னார் மறைமாவட்டத்தில் பணிக்குருக்களாகத் 4 அருட்சகோதரர்கள் திருநிலைப்படுத்தப்பட்டார்கள்.



மறைமாவட்ட ஆயர் மேதகு. கலாநிதி பி.ல.இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை அவர்களால் பணிக்குருக்களாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்கள்.

ஆன்மாவைக் கொல்ல இயலாமல். உடலை மட்டும் கொல்பவர்களுக்கு அஞ்சவேண்டாம். ஆன்மாவையும் உடலையும் நரகத்தில் அழிக்க வல்லவருக்கே அஞ்சுங்கள். (மத்.10,28) என்னும் நம் ஆண்டவர் இயேசுவின் வழிகாட்டுதலை தங்கள் சாவின் மூலம் சாதனையாக்கிய நம், மன்னார் மறைசாட்சிகளின் 475 ஆண்டு மறைசாட்சிய...

தொடர்ச்சி 15ம் பக்கம்..

ஞான ஒளி
GNANA OLI
இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல : 0112695984, 0114899611
பெக்ஸ் : 0112692586
மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com
இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com
02 ஆனி, 2019 ஞாயிற்றுக்கிழமை.

# நீதிக்காகவும், உண்மைக்காகவும் உழைக்கும்போது, உயிர்கொடுக்கும்போது கடவுளோடு நாம் வாழ்கின்றோம்.

புதியதொரு மாதத்திலே உங்களை சந்திப்பதில் மிகவும் மகிழ்வடைகின்றேன். ஆனி மாதம் இயேசுவின் திரு இருதயத்திற்கு அர்ப்பணிக்கப்பட்ட மாதம். தம்மையே பலியாக்கி, தம் திரு உடலையே உலக மாந்தர்க்கு உணவாக்கி மாந்தர்மேல் கொண்ட அன்பினால் பற்றி எரிந்து கொண்டிருப்பதுதான் இயேசுவின் திரு இதயம். எனவே இம்மாதத்தில் உங்கள் வீடுகளில் இயேசுவின் திரு இருதயத்திற்கு திருச்செபமாலை ஒப்புக்கொடுத்து, உங்களையும் உங்கள் குடும்பங்களையும் நாட்டையும் இயேசுவின் இருதயத்திற்கு ஒப்புக்கொடுக்கும்படி கேட்டு நிற்கின்றேன்.

மேலும் இம்மாதத்தில் உயிர்த்த ஆண்டவர் இயேசு தம் பணியை இவ்வுலகில் முடித்துக்கொண்டு விண்ணகம் செல்வதைப் பார்க்கின்றோம். இயேசு உயிர்ப்புக்குப் பின் தம் சீடர்களை தைரியப்படுத்தி, திடப்படுத்தி, தம் பணியை தொடர்ந்தாற்ற அழைப்பு விடுப்பதைக் உயிர்ப்பு கால வாசகங்கள் எமக்கு எடுத்துரைக்கின்றன. எனவே நாமும் விண்ணுலகை உரிமையாக்கிக்கொள்ள மண்ணுலகில் ஆண்டவருக்கு சாட்சியம் பகர வேண்டும் நீதிக்காகவும், உண்மைக்காகவும் உழைக்கும்போது, உயிர்கொடுக்கும்போது கடவுளோடு நாம் வாழ்கின்றோம். கடவுளோடு வாழ்வது என்பது நாம் ஏழைகளில், வறியவர்களில், நோயாளிகளில் அக்கறை கொள்வதும் பராமரிப்பதுமாகும்.

“தூய ஆவியாரின் உடனிருப்பு இல்லையெனில் ஒருவருக்கு குறிக்கோள் இருக்காது. தேர்ந்து தெளிதல் இருக்காது, புனிதம் இருக்காது, தூய்மை இருக்காது.” என்பதை உணர்ந்த இயேசு தம் விண்ணேற்புக்குப் பின் தூய ஆவியானவரை எமக்கு அனுப்புவதைக் காணலாம். “உங்களோடு என்றும் இருக்கும்படி மற்றொரு துணையாளரை உங்களுக்குத் தருமாறு நான் தந்தையிடம் கேட்பேன். தந்தை அவரை உங்களுக்கு அருள்வார். அவரே உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார்” (யோவா. 14:16-17). எனவே நாம் தூய ஆவியாரின் வருகையின் விழாவையும் இம்மாதத்தில் கொண்டாட இருக்கின்றோம். பெந்தகோஸ்தே பெரு விழாவைக் கொண்டாடும் நாமும் ஆவியில் மூழ்கி ஆவியின் கொடைகளைப் பெற்று ஆவியில் தேர்ந்து தெளிந்து அவர் வழியில் செல்வோம்.

கோடி அற்புதரான புனித அந்தோனியார் திருநாளையும் இம்மாதத்தில் நாம் நினைவுகூருகின்றோம். கோடி அற்புதரான தூயவரின் வாழ்வு எவ்வாறு இயேசுவுக்கு உகந்த வாழ்வாக அமைந்ததோ அவ்வாறே அத்தூயவரின் வழியாக எமது ஆன்மீக வாழ்வும் இறைவனுக்கு உகந்ததாய் அமைய வேண்டுமென மன்றாடுவோம். பற்பல புதுமைகளாலும், தமது மறையுரையினாலும் பல்லாயிரக்கணக்கான உள்ளங்களில் இன்றும் வாழ்கின்ற இப்புனிதரின் வாழ்வு திருச்சபையின் மக்களாகிய எமக்கு சிறந்ததொரு எடுத்துக்காட்டாய் அமைகிறது என்பதையும் மனதிற்கொள்வோம்.

இறுதியாக எம்மக்கள் இன்னமும் இயல்பு வாழ்க்கைக்கு திரும்பாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். எமது நாட்டில் உண்மையான சமாதானமும் அமைதியும் நிலைக்க தொடர்ந்து செபிப்போம். இப்பயங்கரவாதத்தினால் காயப்பட்டவர்கள் குணமடையவும், மன அமைதி காணவும் வேண்டி இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**இறையாசீருடன் ஆசிரியர்**



# “கிறிஸ்தவம் என்பது துன்பத்தின் மதமா?”

**அருட்சகோ. பெ. டிலோய்ட்சன் பர்னாந்து, தேசிய குருமடம், கண்டி**

கிறிஸ்துவால் உருவான திருச்சபை ஏன் இன்றளவும் துன்புறுத்தப்படுகின்றது? என்ற கேள்வி பலர் உள்ளங்களில் எழுந்துள்ளது. பாஸ்கா ஞாயிறு சம்பவத்தின் பின்னர் என்னுள்ளும் எழுந்த கேள்வி இதுதான். சில நிகழ்வுகளை நான் கண்கூடாக கண்டதினால் எழுந்த கேள்விகளுக்கு மௌனமே பதிலாக அமைந்தது. கடவுளை அன்புடன் காண வந்து, அவருடைய உயிர்ப்பிலே கலந்து கொண்டு மகிழ்வை ஒருவர் ஒருவரோடு பகிர்ந்து கொள்ள நினைத்த உள்ளங்களுக்கு நடந்த கொடூர சம்பவம் இன்றளவும் மக்கள் மத்தியில் பேசப்படுகின்றது. ஏன் இந்த நிலை? என்பதை நாம் வாழ்க்கையின் கேள்வியாக மாற்றிக் கொண்டால், அதற்கான விடை, இயேசு திருச்சபையை உண்டாக்கிய நாள் முதல் இன்று வரையும் கிறிஸ்தவம் துன்பத்தின் வழியாக தான் மீட்பை கண்டடைந்துள்ளது.

காரணம் திருச்சபையை உண்டாக்கிய நாள்முதல் பேதுருவுக்கு திருச்சபையை கையளித்தபோது “பேதுரு எல்லாம் இழந்து கடவுளை மாட்சிப்படுத்தப் போகிறார் என்பதை குறிப்பிட்டே அவர் இவ்வாறு சொன்னார்” (யோவா 20:19) எனவே மறைமுகமாக பேதுருவின் வேதசாட்சிய மரணத்தை இயேசு முன்குறிக்கின்றார். தன் தலைவர் இயேசுவைப் போல் சீடராம் பேதுருவும் நற்செய்தியின் பொருட்டு தம் உயிரைக் கையளிப்பார். இயேசுவைப் போலவே பேதுருவும் சிலுவையில் அறையப்படுவார். எனவே அன்றைய நாள் தொடக்கம் இன்றளவும் திருச்சபை துன்புறுத்தப்படுகின்றது. எனினும் திருச்சபை துவண்டு போகவில்லை. மாறாக தனது தலைவனின் கரங்கொண்டு இன்றளவும் வானுயர்ந்து நிற்கின்றது.

இந்த திருச்சபையின் வழியாக வருகின்ற எவரும் இயேசுவின் சிலுவையை சுமந்துகொண்டு வரவேண்டும். எனவேதான் என்னை பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் மறந்து தன் சிலுவையை சுமந்துகொண்டு வரவேண்டும் என்று இயேசு பணிக்கின்றார். சிலுவை என்பது துன்பம் தான். ஆனால் அதன் பயனோ விண்ணக வழி என்று தூய பவுல் குறிப்பிடுகின்றார். எனவேதான் “சிலுவை தூக்கிகளை” அழிப்போம் என்று தற்கொலை குண்டுதாரிகள் குறிப்பிட்டிருந்தார்கள். ஆனால் இந்த சிலுவை தூக்கிகள் எவ்வாறு இயேசுவைப் போல் வெற்றி கொள்வார்கள் என்பதை மறந்து விட்டார்கள். சிலுவை தூக்கிகளான நாங்கள் எங்களை பற்றி மட்டுமல்ல மாறாக எமது அயலானையும் தூக்கிக்கொண்டு அவருடைய மீட்பிற்காக பயணிக்கின்றோம் என்பதையும் மறந்துவிட்டார்கள். எனவேதான் இன்றளவும் சிலுவை தூக்கிகளான இந்த கிறிஸ்தவர்கள் உலகெங்கும் பரந்து விரிந்து இயேசுவின் நற்செய்தி பணியை இடைவிடாமல் தொடர்கின்றார்கள்.

> **“அன்றைய காலங்களில் திருப்பலி இன்றி, அருளடையாளங்கள் இன்றி மக்கள் பரிதவித்த காலத்தில் புனித யோசேவ்வாஸ் போன்ற பணியாளர் இரகசியமாக பணி புரிந்ததையும் நாம் அறிவோம். இவ்வாறு துன்புறுத்தப்பட்ட கிறிஸ்தவர்களின் அழியாத, நிலையான விசுவாசத்தின் காரணமாக தான் நாம் இன்று சிலுவையை தூக்கிச் செல்லும் மக்களாக இருக்கின்றோம்.”**

இந்த பணி இன்று தொடங்கப்பட்ட பணியும் அல்ல, இந்த வீரச்சாவும் இன்று தொடங்கப்பட்ட மரணமும் அல்ல, மாறாக திருச்சபையின் வரலாற்றில் கி.பி 60-64ம் ஆண்டு காலப்பகுதியில் எவ்வாறு நீரோ மன்னனின் ஆட்சிக் காலத்தில் கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்பட்டார்கள் என்பதை நாம் அறிவோம். கிறிஸ்தவர்கள் உயிரோடு எரிக்கப்பட்டார்கள். நீரோவின்...

தொடர்ச்சி 15ம் பக்கம்..

## உண்மை உறைக்கும்

கமிலஸ்



ஆனி 02

# ஆண்டவரின் விண்ணேற்பு



இன்று தாயாம் திருச்சபை தனது மறைக்கோட்பாட்டின் மிக முக்கியமான ஒரு மறையுண்மையை பெருவிழாவாகக் கொண்டாடுகின்றது. அதுதான் நம் அண்டவரின் விண்ணேற்பு விழா. விண்ணேற்பு என்றால் என்ன? கிறிஸ்து, தந்தையால் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட்டார், மகிமைப்படுத்தப்பட்டார் என்பதன் தெளிவான அடையாளமாகும். இயேசுவின் விண்ணேற்பு அவரின் இவ்வுலக வரலாற்றின் இறுதி நிகழ்வாகும். தம் உயிர்ப்புக்குப் பின் நாற்பது நாட்கள் அளவாக இவ்வுலக வாழ்வில், பல்வேறுப்பட்டவர்களுக்கு தம்மை வெளிப்படுத்திய இயேசு, சீடர்கள் காண விண்ணேறுகின்றார்.

நாமும் இவ்வுலக வாழ்வில் இருந்து விண்ணகம் செல்லவேண்டியவர்கள். தலையாகிய அவர் ஏறி சென்ற இடத்திற்கு உடலாகிய நாமும், செல்ல வேண்டும். அதற்கு விண்ணிலிருந்து இறங்கி வந்த அவரைப் போல் நாமும் எமது வாழ்க்கையின் நிலையில் இருந்து முதலில் இறங்கிவர வேண்டும். இதையே இன்றைய விழா நமக்கு உணர்த்துகின்றது.

விண்ணக மாட்சியில் அரசில் துயரமோ, சோதனைகளோ, கவலைகளோ, வேதனைகளோ, பயமோ, எதுவும் இராது. அங்கு நாம் போராட வேண்டியது ஒன்றும் இல்லை. சோதனை இராது. பாவம் இராது. மாறாக, கடவுளை காண்பவராக அவரது மாட்சியில் குடியிருப்பவர்களாக இருப்போம்.

ஆகவே நாம் விண்ணகம் ஏறிச் செல்வதற்கு நாம் நம்மை தாழ்த்த வேண்டும். உள்ளாழத்திற்குள் இறங்கிச் செல்ல வேண்டும். நாம் படைக்கப்பட்டவர்கள் என்பதை உணர வேண்டும். ஒரே இறைவனை வழிப்பட்டு அவரது கட்டளைகளை கடைப்பிடிக்க வேண்டும். நமது இவ்வுலக பயணத்தின் இலக்கு விண்ணகமே என்பதை அறிந்து செயல்பட வேண்டும்.

இஸ்ரயேலர் எகிப்திலிருந்து புறப்பட்டபோது அவர்களின் இலக்குத் தெளிவாக இருந்தது. அதாவது வாக்களித்த நாட்டை அடைவதே அவர்களின் இலக்காக இருந்தது. ஆனால் பாலைநிலப் பயணத்தின்போது பலர் அந்த இலக்கை மறந்துவிட்டனர். உணவும் தண்ணீரும் கிடைக்காதபோது அவர்கள் முணுமுணுத்தார்கள். எகிப்திற்கே திரும்பிப்போக நினைத்தார்கள். எனவே பலர் வாக்களித்த நாட்டை அடையவேயில்லை. பல நேரங்களில் நாமும் இஸ்ரயேலரைப் போலவே உள்ளோம். இவ்வுலகில் வாழ்கையில் நம் பயணத்தின் இலக்கைப் பல நேரங்களில் நாம் மறந்து விடுகிறோம். இன்றைய உலகப் போக்கில் கவலைக்குரியவர்களாக வாழ்கிறோம்.

புனித பேதுரு இவ்வாறு எழுதுகிறார்

**அன்பிற்குரியவர்களே, நீங்கள் அன்னியரும் தற்காலக் குடிகளுமாய் இருப்பதால், ஆன்மாவை எதிர்த்துப் போர் புரியும் ஊனியல்பின் இச்சைகளை விட்டுவிடும்படி உங்களை வேண்டிக்கொள்கிறேன். (1பேதுரு 2:11)**

மனிதர்கள் நாங்கள் இவ்வுலகில் அன்னியரும் தற்காலக் குடிகளுமே என்பதை மறந்து எல்லாவித அக்கிரமங்களையும் செய்கிறோம். அநீதியைத் துணிந்து செய்கிறோம். மனச்சாட்சியை அடகு வைத்துவிடுகிறோம். ஆனால் வாழ்க்கை என்பது குறுகியது. விண்ணக வாழ்வே என்றுமுளது என்பதை மறந்துவிடுகிறோம்.

இயேசு நமக்காகத் திறந்து வைத்திருக்கும் விண்ணகம் எல்லாருக்குமானது. அது மொழியைக் கடந்தது; இனத்தைக் கடந்தது; சாதியைக் கடந்தது; ஏன் மதத்தையும் கடந்தது. தாங்கள் மட்டுமே மீட்கப்படுபவர்கள் எனும் குறுகிய மனப்பாங்கு இன்று சிலரிடம் உள்ளது. அது ஒரு மூட நம்பிக்கையாகவுள்ளது. ஆனால் விண்ணகம் எல்லாருக்குமானது என்பதை உணர்கையில் எல்லாரையும் அன்பு செய்வது நமது இன்றியமையாக் கடமை என்பது புலப்படும். விண்ணில் நாம் ஒன்றாகயிருக்கப் போவதுபோல் இங்கும் அன்பினால் நாம் ஒன்றித்த வாழ்க்கை வாழ வேண்டும். குறுகிய எண்ணங்கள் குழிதோண்டிப் புதைகக்கப்பட வேண்டும். சமத்துவமும் சகோதரத். துவமும் மலர்ந்தது அவற்றின் நிறைவை விண்ணகத்தில் நாம் காண வேண்டும். அத்தகு நம்பிக்கையோடு கூடிய மீட்பின் செய்தியை எல்லாருக்கும் வழங்கவும் நாம் அழைக்கப்பட்டுள்ளோம்.

**உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்**

**(புனித மாற் 16:15)**

---

## ஆதி முதல் அனைத்தையுமாளும் பரமனின் ஆண்டவன் பாருக்கு வாக்களித்திட்ட பரிசுத்த ஆவியே வருக!!

ஆனி 09

**தூய ஆவியானவர் பெருவிழா**



தூய ஆவியே, என் ஆன்மாவின் ஆன்மாவே!
தூய ஆவியே, என் நீங்காத் துணைவரே!
தூய ஆவியே தூய்மையும் மாண்பையும் அருள்பவரே!
தூய ஆவியே தந்தைக்கும் மகனுக்கும் இணையானவரே!

புனிதப்படுத்துகிறவரே, புண்ணியங்களை விதைக்கிறவரே,
புவியினில் மக்கள் மாசின்றி வாழ வழி வகுக்கின்றவரே,
புதிய உறவைக் கட்டியெழுப்பி பூமியெங்கும் மகிழ்ச்சி அளிப்பவரே,
புனித ஆவியே எழுந்தருளும், புதுப் பொலிவுடன் நாம் வாழ ஆசீயருள்வீரே,

விண்ணக ஒளியின் கதிரவனே! வீழ்ந்துகிடப்போரை தூக்கியருள்பவரே,
விண்ணக நீரின் ஊற்றானவரே! விதைத்திடுவீரே உம் அன்பை,
விண்ணுலக தூண்டுதலால் எம்மை ஊக்குவிப்பவரே!
விண்ணும் மண்ணும் இணைந்து உம்மை வாழ்த்துகின்றனரே

பயன்படுத்தும் எம்மை பாவங்களிலிருந்து காத்தருளும்,
பலப்படுத்தும் எம்மை பக்தியுள்ளவராக மாற்றியருளும்,
பற்றியெரியப் பண்ணும் அன்பின் விளக்கு சுடரை
பற்றுதலோடு இறை பற்றுதலோடு வாழ எம்மை திடப்படுத்துவீரே.

கனிகள் கொடைகளை கொடையாகக் கொடுப்பவரே!

கனிவுடன் மக்களை காத்து வழி நடத்துபவரே!
கருணைக் கண்கொண்டு கனிவாய் வாழ வைப்பீரே!
கலங்காமல் நாம் வாழ காலமெல்லாம் காப்பீரே!

அருளும் செபமும் தருபவரே ஆறுதல் அளித்து ஆள்பவரே!
அறிவும் பக்தியும் தருபவரே, ஆன்மாவை அருளுடன் காப்பவரே,
அடைக்கலம் ஈந்து அருட்காவலில் உயிர்வாழச் செய்பவரே,
அன்புத் தீயை மூட்டி அவணியை ஆட்கொண்டு வழிநடத்துபவரே,

உறுதிப்பூசுதல் வழியாய் எம் இதயத்தை திடப்படுத்தியவரே,
உலகம் உடல், அலகை ஆகிய எதிரிகளிடமிருந்து காப்பாற்றுபவரே,
உறுதியுடன் வாழ ஆன்ம வலிமை தந்து உரமூட்டுமையா..
உமக்கே ஊழியம் புரிய எம் ஆன்மாவை உறுதிப்படுத்துமையா..


இறைவனுக்காக வாழ இறைப்பற்றை வளர்த்திடுவீரே!
இறையரசையும் எம்மையும்இணைத்து எம்மை உம் கோவிலாக மாற்றுவீரே!
இயேசுவின் தொண்டர்களாக தாம்வாழ வழிகாட்டுவீரே,
இதயங்கள் எம் இதயங்கள் உம் அன்பால் நிரப்பி ஆசி அருளுவீரே!

தந்தையும் தாயுமாய் துணை தந்து எம்மை பாருமையா..!
தயவுடன் காத்து மாயைகளை களைய வழி நடத்துமையா..!
தவறுகள் புரிந்து நாம் தவறுகையில் தயை கூர்ந்து காருமையா..!
தரணியில் நாம் தாழ்ச்சியுடன் வாழ தயை தந்து உதவுமையா..!



என்னை வழிநடத்தும் தூய ஆவியே என்னுள் வல்லமை பொழிந்திடுமே,
என்னை ஆட்கொள்ளும் தூய ஆவியே என்னில் எந்நாளும் இருந்தருளும்,
என்னைக் காத்தருளும் தூய ஆவியே கொடைகள் கனிகள் தந்து காத்தருளுமே!
என்னை உமதாக்கும் தூய ஆவியே என்ன எந்நாளும் வழிநடத்துமே!

*அருட் சகோ. டெலாறோஸ். அ.கா*



# தூய ஆவியானவர்

நமது தாயாம் திருச்சபை மிக முக்கியமான திருவிழாவாகத் தூய ஆவியார் பெருவிழாவைக் கொண்டாடுகின்றது. தூய ஆவியார் திருத்தூதர்கள் மீதும், சீடர்கள் மீதும் பொழியப்பட்ட உன்னதமான நிகழ்வை இன்று நினைவு கூறுகின்றோம். ஆண்டவர் இயேசு தாம் உயிர்த்த பிறகு சீடர்களுக்கு அமைதி உண்டாகுக என வாழ்த்தியதோடு அவர்கள் மீது ஊதி தூய ஆவியை அளிக்கின்றார்.

## தூய ஆவியானவர் யார்?

- ✠ தூய ஆவியானவர் திரித்துவத்தின் மூன்றாம் ஆள். பிதாவினின்றும், சுதனினின்றும் புறப்படும் ஆண்டவரும், உயிர் அளிப்பவருமானவர்.
- ✠ பிதாவோடும் சுதனோடும் ஒன்றான ஆராதனையும் மகிமையும் பெறுகின்றவர்.
- ✠ இறைவாக்கினர் வாயிலாக பேசுபவர்
- ✠ அருளடையாளங்கள் வழியாக நம்மை புனிதப்படுத்துபவர்
- ✠ நம்மை தந்தையிடம் வழி நடத்துபவர்
- ✠ நம்மை வாழ வைப்பவர்
- ✠ நம் ஐம்புலன்களுக்கும், அறிவுக்கும் எட்டாதவர்
- ✠ உயிராற்றல், ஞான தீபம், அறிவுச்சுடர்
- ✠ உருவாக்கும் சக்தி
- ✠ கடவுளின் பரிசுத்த கொடை

## தூய ஆவியாரின் செயல்

"நற்செய்திப்பணி தூய ஆவியாரின் செயல்" என்கிறார் திருத்தந்தை புனித ஜோன்போல். நற்செய்தியை அறிவிக்க விவிலிய அறிவு மட்டும் போதாது. தூய ஆவியாரின் ஆற்றல் வேண்டும். பெந்தக்கோஸ்து பெருநாளில் பேதுரு கடவுள் மரித்த இயேசுவை உயிர்த்தெழச் செய்தார். கடவுளின் வலப்பக்கத்தில் உள்ள அவர் வாக்களிக்கப்பட்ட தூய ஆவியாரைத் தம் தந்தையிடமிருந்து பெற்றுப் பொழிந்தருளினார். நீங்கள் காண்பதும், கேட்பதும் இதுதான்" (தி.ப 2:32-33) என்கிறார்.

எருசலேமை விட்டு சீடர்கள் சென்ற இடமெல்லாம் நற்செய்தியை அறிவித்தனர். பிலிப்பு சமாரியாவில் தீவிரமாக நற்செய்தி பணிபுரிந்தார். அவர் செய்த அரும் அடையாளங்களைக் கண்டு திருமுழுக்குப் பெற்றனர். (தி.ப 8:1-18) பேதுருவும், யோவானும் தலைமீது கைவைத்து தூய ஆவியாரால் அபிஷேகம் செய்தனர், செசரியாவிலும் (தி.ப 10:44-48)

ஆகவே ஆவியாரின் செயல் நம்மை நற்செய்தி ஆற்றவைப்பது ஆகும். அதற்கு அவரது கொடைகளாலும், வரங்களாலும் நம்மை நிரப்புகின்றார்.

## தூய ஆவியார் நம்மை ஆட்கொண்டால்

தூய ஆவியார் ஒருவரை ஆட்கொள்ளும் போது அவர் முற்றிலும் மாறிய புதிய படைப்பாகிறார். பழைய இயல்பு புதைக்கப்படுகிறது. புதிய இயல்பு உயிர் பெற்றெழுகிறது. இருளின் ஆதிக்கம் மறைகிறது. அருளின், ஒளியின் வாழ்வு உதயமாகிறது. "இதோ நான் அனைத்தையும் புதியனவாக்குகிறேன்" (தி.வெ 21:3) மனமாற்றமே புது வாழ்வின் ஆரம்பம். தூய ஆவியார் எல்லா நிலைகளிலும், எல்லா மாற்றங்களையும் உருவாக்குகின்றார். பொதுவாக, எல்லோருக்கும் ஏற்படும் கண்ணால் காணக் கூடிய சில மாற்றங்களைப் பற்றி பார்ப்போம்.

- ✷ தினமும் இறைவன் சந்நிதியில் தனித்து செபிக்க வேண்டும் என்ற ஆர்வம் பிறக்கிறது. செபம் செய்யவே நேரமில்லை என்பவர்கள் அதிக நேரம் ஆழ்நிலை தியானம் செய்யத் தூண்டப்படுகின்றனர். செபம் செய்வது கடினம் என்றவர்கள் எளிதாக ஆவியில் நிறைந்து, துதித்து போற்றி செபிக்கின்றனர். மன்றாட்டு செபத்தை விட புகழ்ச்சி செபமே அதிகமாக செய்ய தூண்டப்படுகின்றனர்.
- ✷ இறைவார்த்தை மேல் ஓர் வாஞ்சை ஏற்படுகிறது. அதைத் தினமும் படித்து, சுவைத்து, தியானிக்க ஆறாப்பசி ஏற்படுத்துகிறது. ஏற்கனவே, படித்திருந்தாலும் தூய ஆவியார் பல புதிய காரியங்களை வெளிப்படுத்துகிறார். முழு உண்மையை நோக்கி வழிநடத்துகிறார். இறை வார்த்தையே வாழ்வின் ஒளியும், வழியுமாக மாறுகிறது.
- ✷ தந்தையின் எல்லையில்லா அன்பை அன்றாட வாழ்வில் அனுபவ ரீதியாக உணர முடிகிறது. இயேசுவே நம் மீட்பர், ஆண்டவர் என்று உணர முடிகிறது. தூய ஆவியார் நம்மோடு இருந்து, நம்மில் செயல்படுவதையும், வழி நடத்துவதையும் உணர முடிகிறது. ஒரே வார்த்தையில் மூவொரு இறைவன் மேல் ஆழ்ந்த விசுவாசமும் பக்தியும் உண்டாகிறது.
- ✷ பல ஆண்டுகளாக விட்டொழிக்க முடியாத பாவப் பழக்கங்களிலிருந்தும், பாவக் கட்டுக்களிலிருந்தும் படிப்படியாக விடுதலை கிடைக்கிறது. பாவத்தை வெல்ல வல்லமை கிடைக்கிறது.

தொடர்ச்சி 15ம் பக்கம்..




# முரண்பாடுகள்



இளைஞர் வாழ்வில் ஏராளமான முரண்பாடுகள் காணப்படுகின்றன. ஒரு மாணவனைப் பார்த்து, ஏன் கெட்ட வார்த்தை பேசினாய்?" என்றால் "நான் கெட்ட வார்த்தை பேசவில்லை" என்பான். மற்றொருவனிடம் "ஏன் பென்சிலை உடைத்தாய்?" என்றால், நான் உடைக்கவில்லை என்பான். "ஏன் பொய் சொன்னாய்?" என்றால், "நான் பொய்யே சொல்ல மாட்டேன்" என்பான்.

இந்த உதாரணங்களை உற்றுநோக்குகையில் ஒன்றுக்கு ஒன்று எதிராக இருக்கிறது. முரணாக இருக்கிறது என அறிகிறோம். இதையே நாம் எதிர்மறை அல்லது முரண்பாடு என அழைக்கின்றோம். முரண்பாடு என்றால் என்ன? முரண்பாடு என்ற சொல் இலத்தீன் மொழியிலிருந்து வருகிறது. கோன்ற்ரா தீசி தீச்செரே எதிராகப் பேசுவது. சிலர் எப்பொழுதும் யார் என்ன கேட்டாலும் எதிராகவே பேசிக் கொண்டிருப்பர். இவர்களை எதிராளிகள், எதிர்மறையாளர், நான் எதிரி என அழைப்பார்கள். அதாவது எப்பொழுதும் முரண்பாடுகளுடன் பேசுபவர்கள். ஏனெனில், அவர்கள் சிந்தனை சொல் செயல் யாவுமே முரண்பாடுகள் நிறைந்திருக்கின்றன.

இத்தகைய முரண்பாடுகள் எல்லாருடைய வாழ்விலும் காணப்படுகின்றன. சாதாரண மனிதர், அரசியல்வாதி சமயவாதிகளிடையே இத்தகைய முரண்பாடுகளை அதிகமாகக் காணலாம்.

### அ) சாதாரண மனிதர்

பொதுவாக ஒருவர், "ஐயா உங்களை நான் கடைத் தெருவிலே பார்த்தேன்" என்றால் அவர், "இல்லை" என மறுதலிப்பார். "வேறு யாரையும் பார்த்துவிட்டுத் தெரியாமல் என்னைச் சொல்லுகிறீர்கள்" என்பார்கள். ஆனால் உண்மையில் அவர்தான் அங்கே நின்றுகொண்டிருந்திருப்பார்.

### ஆ) அரசியல்வாதி

ஓர் அரசியல்வாதியைக் கேட்டால் அவருடைய பேச்சிலும் எதிர்மறைகள் நிறைந்திருக்கும். "நாங்கள் சொல்வதைச் செய்வோம். செய்வதைச் சொல்வோம்" என்பார்கள். எனினும் செய்வதையும் சொல்லமாட்டார்கள், சொல்வதையும் செய்யமாட்டார்கள்ஆகவே, அரசியல்வாதிகள் முரண்பாடுகள் அதிகம் கொண்டவர்கள்.

### இ) சமயவாதி

"ஐயா! நீங்கள் எனக்கு வேலை வாங்கித் தருவதாகச் சொன்னீர்களே!" என்று கேட்டால், "அப்படி நான் சொல்லவே இல்லை" என்று எளிதாகச் சொல்லிவிடுவார்கள். சாதியைப் பற்றி பேச மாட்டேன் என்பார்கள். ஆனால் சாதீயத்தை அவர்கள் தான் பரப்பிக் கொண்டிருப்பார்கள்.விவிலியத்தில் பேதுருவைப் பார்க்கின்றோம். அவர் யூதரிடம் ஒரு வகையாகவும் பிறவினத்தாரிடையே இன்னொரு வகையாகவும் நடந்துகொண்டிருக்கிறார். எனவே முரண்பாடு எல்லா வகையினரிடமும் காணப்படுகிறது.

**தொடரும்**

# நம்மை அளவற்ற விதமாய் சிநேகிக்கும் இயேசுவின் திரு இருதயம்

“என் தந்தை என்மீது அன்பு கொண்டுள்ளது போல நானும் உங்கள்மீது அன்பு கொண்டுள்ளேன். என் அன்பில் நிலைத்திருங்கள்” (யோவா 15:9)

என்ன இனிமையான மொழிகள்! நம்மை ஒருவர் நேசிப்பதை நாம் உணரும்பொழுது எவ்வளவோ திருப்தியடைகின்றோம்! மேற்கூறிய மொழிகளை நம்மை நோக்கி உரைப்பது யார்? மனிதர்களும் அல்ல, மோட்சவாசிகளுமல்ல, சம்மனசுகளுமல்ல, ஆனால் நம்மை அணைகடந்த விதமாய் நேசிக்கும் **இயேசுவின் திரு இருதயத்தில்** இருந்துதான் இச்சொ-ற்கள் புறப்படுகின்றன. ஆகவே விண்ணக மண்ணக சர்வேசுரனான இயேசுகிறிஸ்துநாதர் நம்மை நேசிக்-கின்றார்.

## இயேசுநாதர் நம்மீது காட்டும் அளவுகடந்த அன்பு

ஒருவன் மற்றொருவன் மேல் வைத்திருக்கும் அன்பை அளவிட அவன் தன் நண்பனுக்காகப்படும் துன்பதுயரங்கள், கரிசனம் எவ்வளவென்று கணக்கிட்டுப் பார்க்க வேண்டும். எனவே நமது ஆண்டவர் நம்மீது கொண்டிருக்கும் அன்பையறிய அவர் நமக்காக அனுபவித்த வேதனைகளையும் துன்ப துயரங்களையும் வேதாகமத்திலிருந்து காண்போம்.

ஆதாமின் வழியாய் மனுக்குலம் இழந்த மோட்சத்தை நமக்குத் திரும்பவும் அளிக்க தேவசுதன் தன் அன்பின் பெருக்கால் மனுவுருவெடுத்தார். அவர் எளிமையில் பிறந்து ஏழையாய் வாழ்வதை முழும-னதுடன் ஏற்றுக்கொண்டார். அவர் உலகத்தில் வாழ்ந்த ஒவ்வொரு நிமிடமும் நம் ஆத்தும சரீர நன்மையைக் கோரியே உழைத்து வந்தார். அவர் செய்த இனிய அறிவுரைகளும், காட்டின நன்மாதிரிகையும், சிந்தின கண்ணீரும், செய்த புதுமைகளும் அன்பின் அறிகுறி-களே.

மேலும் அவர் சிலுவையில் நமக்காகப் பாடுபட்-டது போதாதென்று, அன்பின் அடையாளமாக, திவ்விய நற்கருணையை ஏற்படுத்தினார். தம் சரீரத்தையும் இரத்தத்தையும் நமக்கு உணவாய் அளித்து திவ்விய நற்கருணைப் பேழையில் உலகம் முடியும் வரை நம்மோடு, நமக்குத் துணையாகத் தங்கியிருக்க விரும்பினார். “இயேசுக்கிறிஸ்துநாதர் நம்மை அணை-கடந்த விதமாய் நேசித்தார்” (எபே 2) என்று புனித பவுல் கூறுகின்றார்.

சுதனாகிய சர்வேசுரன் மனுக்குலத்தின் மீது காட்டிய எல்லையில்லா அன்பை, ஒரு சமயம் ஓர் வேத போதகக்குரு ஜப்பானிய மக்கள் சிலருக்குத் தெளிவாய் எடுத்துரைத்தார். அதைக் கேட்ட அவர்கள் வியப்படைந்தனர். “ஓ கிறிஸ்தவர்களுடைய கடவுள் எவ்வளவோ அன்பிற்கு உரியவராயிற்றே” என்று கூறினார். மேலும் குருவானவர் அவர்களை நோக்கி அந்த நல்ல தேவனை நாம் நேசிக்க வேண்டிய கட்டளையும் உண்டென்று சொன்னபோது, அவர்கள் வியப்புற்று, “அவரை நேசிக்கக் கட்டளையும் வேண்டுமா? அவரை நேசிப்பதே நமக்கோர் பாக்கியமாயிற்றே அவரை நேசியாதிருப்பது நிர்ப்பாகியமல்லவா?மக்கள், அவர் மீதுள்ள அன்பால் தூண்டப்பட்டு, சிநேக அக்கினியால் பற்றியெரிந்து, அந்த கடவுளின் பீடத்-தடியில் அல்லவா காத்திருக்க வேண்டும்” என்று உரைத்தனர். அந்த அருமையான மொழிகளைக் கேட்ட குருவானவர் அவர்களை அன்புடன் நோக்கி, “ஆனால், பல கிறிஸ்தவர்கள் ஆண்டவரை நேசியாதிருப்பது மாத்திரமல்ல, அவர் இருதயத்தைப் பாவத்தால் புண்ப-டுத்தி அவருக்கு அவமானத்தை வருவிக்கின்றனர்” என்றார். குருவின் வார்த்தைகளைக் கேட்ட அந்தப் புதுக் கிறிஸ்தவர்கள் வியப்புற்று சஞ்சலத்துடன் “ஓ! எவ்வளவு நன்றி கெட்ட மக்கள் அவர்கள்! கல்நெஞ்சு படைத்த நிர்பாக்கியர்கள்”! என்று உரைத்தனர்.

நாம் அந்த அன்பின் அரசரை நேசியாமல் பாவத்தில் பழகிவந்தால், அந்தப் புதுக்கிறிஸ்தவர்கள் கடிந்து கூறிய சொற்கள் நமக்கல்லவா? ஆகையால் அன்பின் பலியான இயேசுவை நேசித்துப் பாவத்தைவிட்டு அகலக் கடவோம்.

## நாம் அவருக்கு வருவிக்கும் நிந்தை

நமதாண்டவர் புனித மார்கரீத் மரியம்மாளுக்குக் காட்சியளித்து தம் இருதயத்தைச் சுட்டிக் காட்டி “இதோ, மனுக்குலத்தை அளவற்றவிதமாய் நேசிக்கும் இருதயம். ஆனால், அது நேசிக்கப்படவில்லை. மாறாக நிந்தையையே பெறுகின்றது” என்று முறையிட்டார். அவ்விருதயத்தின்மீது முள்முடி சூட்டப்பட்டிருப்பதையும், அவ்விருதயத்திலிருந்து அக்கினிச் சுவாலை வீசுவதையும், அச்சுவாலையின் மீது திருச்சிலுவை தோன்றுவதையும், அவ்விருதயம் ஈட்டியால், ஊடுருவப்பட்டிருப்பதையும் புனித மார்கரீத் மரியம்மாள் கண்டாள்.

அந்த **முள்முடியின்** அர்த்தமென்ன? சிற்றின்பப் பாவங்கள், துர்மாதிரிகை, தேவநிந்தை, அசட்டை, அவசங்கை போன்ற முட்களால் பிணைத்த முள்முடியை அவரது திருஇருதயத்தில் வைத்து, அழுத்தி, அதனைக் காயப்படுத்தியது நாம் தான். இதற்கு நாம் பரிகாரம் செய்தாக வேண்டும். **தாழ்ச்சியென்ற** ரோஜாமலரையும், **கற்பென்னும்** லில்லிப்பூவையும், **அன்பு** என்னும் மல்லிகை மலரையும் முடியாகத் தொடுத்து அவரது இருதயத்தில் சூட்டுவோம்.

அவ்விருதயத்தில் தோன்றிய **அக்கினிச் சுவாலை** எதைக் குறிக்கின்றது? அது நமதாண்டவர் நம்மீது காட்டிவரும் அன்பு - பற்றியெரியும் அக்கினியேயன்றி வேறல்ல. அவர் நமக்காக எண்ணற்ற வேதனைகளை அனுபவியாமலும், சிலுவையில் மரிக்காமலும் நம்மை மீட்கலாம். ஒரு துளி இரத்தம் போதும் நம்மை மீட்டுக் கடவுளோடு சமாதானப்படுத்துவதற்கு ஆனால், அளவற்ற அவருடைய அன்பிற்கு அது போதுமானதாக தோன்றவில்லை. அதனால் தான் சொல்லொண்ணா பாடுகள் பட்டு இரத்தத்தைச் சிந்தி, அவமானம் நிந்தைகள்பட்டு உயிரையும் கொடுத்தார். திவ்விய இயேசுவின் திருஇருதயத்தில் காணும் அக்கினிச் சுடர்கள் நம்மை நோக்கியதாகவும் அவரது அன்பின் சுடர்களாம். அன்பு அன்பைக் கேட்கிறது. “நான் பூமியிலே அக்கினியைப் போட வந்தேன். அது பற்றியெறிய வேண்டும் என்பதல்லாதே, வேறென்னத்தை விரும்புகிறேன்” (லூக் 12:49)

அந்தக் திருஇருதயத்தில் தோன்றும் **சிலுவை** நமக்குப் போதிக்கும் போதகம் நம்மிருதயத்தை ஊடுருவுகின்றது. அச்சிலுவையில்தான் நமதாண்டவர் நம் பாவங்களைச் சுமந்தார். அதுதான் நம் மீட்பின் ஆயுதம். சிலுவையில் இருந்துதான் தாம் உயிர்விடுமுன் தம்மை வதைத்தவர்களுக்குப் பொறுத்-தல் தந்தார். சிலுவையிலிருந்துதான் நமக்காகச் செபித்தார். சிலுவையில்தான் நல்ல கள்ளனுக்குப் பரகதியை வாக்களித்தார். சிலுவையில்தான் தம் தாயை நமக்குத் தாயாகக் கொடுத்தார். சிலுவையில்தான் தம் இருதயத்தை நமக்குத் தந்தார். சிலுவையில் தான். “எல்லாம் நிறைவேறிற்று” என்று கூறி உயிரையும் விட்டார். ஆகையால் சிலுவை நம் இருதயத்தில் எழுப்பும் எண்ணங்களை ஆழ்ந்து சிந்தித்தால் அதுவே நமது விசுவாசத்தின் அழியா முத்திரையும், நமது நம்பிக்கையின் அசையாத் தூணும், நமது அன்பின் அடையாளமும் ஆகும் என்பது புலப்படும்.

அவர் இருதயம் **வாளால்** ஊடுருவப்பட்டதாகக் காணப்பட்டது. அந்தக் காயம் எப்படி ஏற்பட்டது? நாம் மனந்திரும்பாமல் வேண்டுமென்று கட்டிக்கொள்ளும் பாவங்களே அவர் தூய இருதயத்தைக் குத்திப்பிளந்தன. ஒரு வாள் மாத்திரமல்ல, ஆயிரக்கணக்கான வாள்கள் நாடோறும் அந்த அன்புள்ள இருதயத்தினை ஊடுருவுகின்றன. மனிதரின் ஒவ்வொரு பாவமும் அவ்விருதயத்தைக் காயப்படுத்தும் வாளாகும். எனவே இயேசுவின் திருஇருதயத்தில் பதிந்திருக்கும் பாவங்களை **நல்ல பாவசங்கீர்த்தனத்தால்** நாம் பிடுங்கியெறிந்து, கண்ணீராலும் தவத்தாலும் அக்கா-யத்தை ஆற்ற முற்படுவோம். சர்வேசுரனுடைய விசேஷ உதவியல் நாம் பாவத்தில் விழாமலிருந்து, மற்றவர்கள் கட்டிக்கொள்ளும் பாவங்களுக்கு நாம் தகுந்த பரிகாரம் செய்வோம்.

காயப்பட்ட தம் இருதயத்தை புனித மார்கரீத் மரியம்மாளுக்கு நமது ஆண்டவர் **தம் விரலால் சுட்டிக்காட்டுகிறார்.** அதன் அர்த்தமெதன்ன? ஆண்டவர் கூறுகிறார். “உலகில் பல இருதயங்கள் இருக்கின்றன. அவை அல்லும் பகலும் உன்னை நோக்கி உன் இருதயத்தை எங்களுக்குக் கொடு என்று கேட்டுப் போர் புரிகின்றன. ஏமாந்து போகாதே. அவை இம்மையில் (இவ்வுலக வாழ்வில்) உன்னைக் காட்டிக் கொடுத்து அவமானங்களுக்கு ஆளாக்கி மறுமையில் (மறு உலகில்) நீ நித்திய தண்டனையை அடையச் செய்யும். ஆனால் நான் சுட்டிக் காட்டும் இந்த இருதயத்தை நேசித்தால் இம்மையில் ஆறுதல் அடைந்து புண்ணியங்களைத் திரட்டி பகரதி சேரலாம்” இயேசுவின் திருஇருதயத்தின் இவ்வார்த்தைகளுக்கு நாம் செவி கொடுக்கிறோமா?

## திருஇருதய ஆண்டவரை நேசிப்பதால் நாம் அடையும் பலன்

நம்முடைய திவ்விய இயேசு புனித. மார்கரீத் மரியம்-மாளுக்குக் காட்சியளித்தபோது தன் திருஇருதயத்தின்



மீது பக்தி வைப்பவர்களுக்கு பல வரங்களை ஏராளமாக அளிப்பதாக வாக்களித்தார். அந்த வரங்களை இங்குச் சுருக்கமாகப் பார்ப்போம்.

திரு இருதய பக்தியுள்ளவர்களுக்கும் தங்கள் வீட்டில் அவர் திருப்படத்தை (சாயலை) ஸ்தாபித்து வணங்கி வருகிறவர்களுக்கும் குடும்பத்தில் சமாதானமும் ஆசீர்வாதமும் அளிப்பதாகவும், குருக்களும் துறவிகட்கும் புண்ணியத்தில் ஓங்க வரமும், பாவிகளுக்குக் கெட்டப் பழக்கங்களை விட்டு விலக மனத்திடனும், பக்திமான்களுக்குப் புண்ணியத்தில் வளர்வதற்கு ஊக்கமும், வெதுவெதுப்பான ஆத்துமங்க-ளுக்கு ஆர்வமும் அருளுவதாகவும், திரு இருதய பக்தியைப் பரப்ப உழைத்து வருபவர்களின் பெயரைத் தம் இருதயத்தில் அழியாமல் பதித்து வைப்பதாகவும் வாக்களித்தார். அவர் கொடுத்த வாக்குறுதியை மறப்பாரோ?

நாம் உலகில் காண்பதென்ன? மகாபரிசுத்த-த்தனமும், பிரமாணிக்கமும், இரக்கப்பெருக்கமும், நிறைந்த திரு இருதயத்தைப் புறக்கணித்து பலர் எந்த நன்மையையும் தராத அற்ப இருதயங்களை நேசித்து மோசம் போகின்றனர். அந்தத் திருஇருதயத்தை நேசிப்-பதாகச் சொல்லும் கிறிஸ்தவர்கள் கூட திவ்விய நற்கருணையில் அன்பின் பலியாய் நிற்கும் திவ்விய ஆண்டவரைச் சந்திப்பதில் எவ்வளவோ அசமந்தம் காட்டுகின்றனர்! சிலர் பாவ மாசுள்ள ஆத்துமத்தோடும் திவ்விய நற்கருணையை வாங்க முற்படுகின்றனர்! கிறிஸ்தவர்கள் திவ்விய நற்கருணை முன் நடந்து கொள்ளும் விதந்தான் என்ன?

ஆகவே, இயேசுவின் திருஇருதய ஆண்டவரை நம் முழு இருதயத்தோடு நேசித்து அவரது வார்த்தையை உணர்ந்து அதனை நம் நடத்தையில் காட்டுவோமாக, ஒன்பது தலைவெள்ளிக் கிழமைகளில் பரிகார திவ்விய நற்கருணை உட்கொள்ளும் நல்ல பழக்கத்தை மறக்காமல், விடாமல் அனுசரித்து, நமதாண்டவர் வாக்குப்படி நாம் தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்வோமாக! திரு இருதய பக்தியை இவ்வுலகில் பிரமாணிக்கமாய் அனுசரித்து வந்தோமானால் நமது பெயர் அவரது திரு இருதயத்தில் என்றும் அழியாமல் புதிப்பிக்கப்பட்டிருப்பதை காண்போம்!

**இயேசுவின் திரு இருதயம் எங்கும் சிநேகிக்கப்படுவதாக!**



## இறைவாக்கைக் கேட்பதால் திருச்சபை கட்டியமைக்கப்படுகிறது

# இறைவார்த்தை வழிபாடு

### ஆண்டவரின் விண்ணேற்பு விழா (02.06.2019)

### பேதுரு

**வாசக விளக்கம்:** திருஅவையின் அழைப்பை ஏற்று ஆண்டவரின் விண்ணேற்பு பெருவிழாவை நினைவு கூர வந்திருக்கும் இறைமக்களே! இயேசுவின் சிலுவைச்சாவோடு முடிந்துவிட்டது என்ற எதிரிகளின் கொண்டாட்டம் துக்கமாக மாற்றப்பட்டது இன்றைய நாளில்தான். தூய லூக்காவின் வார்த்தைகளின்படி உயிர்த்த இயேசு தம் திருத்தூதர்களுடன் 40 நாள் வாழ்ந்து அவர்களை திடப்படுத்தி, நினைவூட்டி தனது பணியைத் தொடர்ந்து செய்ய அவர்களைப் பணித்தார் எனப் பார்க்கின்றோம். இயேசு தந்தையின் திருவுளத்தை நிறைவேற்ற மானிட மகனாகப் பிறந்து, மனிதரைப் போல் வாழ்ந்து சிலுவையில் அறையப்பட்டு அடக்கப்பட்டார். இயேசு தன்னுடைய கடமையை நிறைவேற்றி வெற்றி வீரராய் விண்ணகம் சென்றார். கிறிஸ்துவைப் போல நாமும் நம்முடைய கடமைகளை நிறைவேற்றி விண்ணகம் செல்ல அழைக்கப்படுகின்றோம் என்ற செய்தியை இன்றை பெருவிழா நமக்குத் தருகின்றது. எனவே விண்ணேற்றமடைந்து இயேசு திரும்பி வரும்போது அவரது மாட்சியில் பங்கு பெறவும், அவரது சாட்சிகளாக இவ்வுலகில் வாழவும் இறையருள் வேண்டிப் பலியில் இணைவோம்.

**முதல் வாசகம் : தி.ப 1:1-11**

எங்கள் கண்கள் முன்பாக, இயேசு மேலே எடுத்துக் கொள்ளப்பட்டார்.

**பதிலுரைப் பாடல் :**

எக்காளம் முழங்கிடவே உயரே ஏறுகின்றார் ஆண்டவர்.

**இரண்டாம் வாசகம் : எபி 9:24-28,10:19-23**

கிறிஸ்து விண்ணுலகிற்குள்ளேயே நுழைந்திருக்கிறார்.

**நற்செய்திக்கு முன் வசனம் :**

அல்லேலூயா அல்லேலூயா நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள். இதோ! உலக முடிவு வரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கின்றேன் என்கிறார் ஆண்டவர் அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம் : லூக் 24:40-53**

**விசுவாசிகளின் மன்றாட்டு**

எல்லாம் வல்ல இறைவா!
எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

தந்தையாகிய இறைவனின் திருவுளத்தை இம்மண்ணில் நிறைவேற்றி வெற்றி வீரனாய் விண்ணகம் சென்ற இயேசுவின் விண்ணேற்பை தன் மக்களோடு இணைந்து கொண்டாடும் திருஅவையை வழிநடத்தும் திருஅவையின் தலைமை ஆயரான திருத்தந்தை, ஆயர்கள், அருட்பணியாளர்கள், துறவியர் அனைவரும் இயேசு வழங்கிய நற்செய்திப்பணியை செவ்வனே ஆற்றி திருஅவையோரை வழிநடத்தத் தேவையான வரங்களைப் பொழிந்தருள வேண்டுமென்று...

வன்முறைகளினாலும், கலவரங்களினாலும் இருளடைந்து கறைபடிந்து காணப்படும் எமது நாட்டின் துன்பங்களும் துயரங்களும், அவமானங்களும் நீங்கி அன்பும் அமைதியும் ஒற்றுமையும் உருவாகி நிம்மதி தோன்றவும் மனிதநேயம் உருவாகி வேற்றுமைகள் அகன்றிட உமதன்மைப் பொழிந்தருள வேண்டுமென்று...

விண்ணேற்பு விழாவானது நமக்கு மண்ணக நிலையிலிருந்து விண்ணக உயர்வைத் தருகின்றது என்பதை உணர்ந்து அயலானில் அக்கறை கொண்டு பகைவரை அன்பு செய்து, துன்புறுத்துவோருக்காக மன்றாடி விண்ணேற்றமடைந்த இயேசு திரும்பி வரும்போது அவரது மாட்சியில் பங்குகொள்ள ஆயத்தமாக இருக்க வேண்டிய நிலையை எம்மீது பொழிந்தருள வேண்டுமென்று...

### தூய ஆவியார் பெருவிழா (09.06.2019)

**வாசக விளக்கம்:** அன்புத் திருச்சபைத் திருக்கூட்டமாக ஒன்றிணைந்து வந்திருக்கும் இறை நெஞ்சங்களே! இன்று திருஅவையானது தெய்வீகத் தயாளன் தூய ஆவியார் பற்றி சிந்திக்க நம்மை அழைக்கின்றது. இன்றைய சூழலில் பல வகையான சிக்கல்களோடு, தேவைகளோடும் தடுமாறும் நாம் தேவைகளைத் தேவையற்றவைகளிலிருந்து பிரித்துப் பார்க்க துணையாளராம் ஆவியாரை உயிர்த்த ஆண்டவர் நமக்குத் தந்திருக்கின்றார். மரணத்தின் மீது வெற்றிகொண்ட ஆண்டவர் தம் திருத்தூதர்களுக்கு தூய ஆவியை பரிசாக, கொடையாக கொடுத்திருக்கின்றார். திருத்தூதர்களுக்கு எது தேவை என்பதை இயேசு அறிந்திருந்தார். தூய ஆவியாரால் நாமும் மன்னிப்பையும் அமைதியையும் மகிழ்ச்சியையும் பெற்றுக்கொள்ளுகின்றோம். தூய ஆவியாரைப் பெற்றுக்கொண்ட திருத்தூதர்களின் செயல்பாட்டை நாம் திருத்தூதர் பணிநூலில் வாசிக்கின்றோம். தூய ஆவியார் நமது தேவைகளை அறிந்து அவற்றை வழங்க முன் வருகிறார். நாம்தான் அவரை செயல்பட விடாமல் தடுத்துவிடுகின்றோம். எனவே தூய ஆவியாரின் பெருவிழாவைக் கொண்டாடும் இந்நாளில் அவரின் தூண்டுதலுக்கு முழுமையாக கீழ்படிவோம். இதற்காகப் பலியில் மன்றாடுவோம்.

**முதல் வாசகம் : தி.ப 2:1-11**

தூய ஆவியின் தூண்டுதலால் அவர்கள் ஒவ்வொருவரும் பேசத் தொடங்கினார்கள்.

**பதிலுரைப் பாடல் :**

ஆண்டவரே, உம் ஆவியை அனுப்பி, மண்ணகத்தின் முகத்தைப் புதுப்பிக்கின்றீர்.

**இரண்டாம் வாசகம் : 1கொரி 12:3-7, 12-13**

நாம் எல்லோரும் ஒரே தூய ஆவியால் ஒரே உடலாய் இருக்கும்படி திருமுழுக்குப் பெற்றோம்.

**நற்செய்திக்கு முன் வசனம் :**

அல்லேலூயா அல்லேலூயா தூய ஆவியே எழுந்தருளி வாரும் உம்மில் நம்பிக்கை கொண்டோரின் இதயங்கை நிரப்பியரும் அவற்றின் உமது அன்பின் தீ பற்றியெரியச் செய்தருளும். அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம் : யோவா 20:19-23**

**விசுவாசிகளின் மன்றாட்டு**

எல்லாம் வல்ல இறைவா!
எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

உயிர்த்த ஆண்டவரின் உன்னத கொடையாகிய தூய ஆவியாரால் வழிநடத்தப்படும் திருஅவையின் தலைவரான திருத்தந்தைக்கும் ஆயர்கள், அருட்பணியாளர் துறவியர் இறைமக்கள் அனைவருக்கும் அன்பின் ஆவியானவரின் வரங்களையும் கொடைகளையும் பண்புகளையும் நிறைவாக வழங்கி வழிநடத்தியருள வேண்டுமென்று...

அன்பிழந்து அமைதியிழந்து ஆண்டவன் அருள் நாடி தவிக்கும் இன்றைய சூழலில் நாம் கொண்டாடும் தூய ஆவியார் பெருவிழா அர்த்தமுள்ளதாக இருக்க உண்மையான நாட்டையும் மக்களையும் நேசிக்கின்ற மக்களாக இனம், மதம், மொழி பேதங்களையும் சுயநலன்களையும் மறந்தவர்களாக ஆவியாரின் அருள் எம்மில் தங்கவும் வளரவும் இடமளிக்கும் மக்களாக வாழ வரமருள வேண்டுமென்று...

திருத்தூதர்களுக்கு உயிர்த்த ஆண்டவர் கொடுத்த அன்புப் பரிசு தூய ஆவியார் அவரைப் பெற்றுக்கொண்ட திருத்தூதர்கள் வாழ்ந்ததுபோல திருமுழுக்கு வழியாகவும் உறுதிப்பூசுதல் வாயிலாகவும் தூய ஆவியாரைப் பெற்றுக்கொண்ட நாமும் உயிர்த்த ஆண்டவரின் சாட்சிகளாக வாழ்ந்து நற்செய்தியின் தூதர்களாக வாழ்ந்திட வரமருள வேண்டுமென்று...

## ஆன்ம வாழ்வுக்குப் பயன்தரும் அறிவுரைகள் - 06


# பயனற்ற பேச்சை விலக்கு

- உன்னால் இயன்றவரை மனிதனின் இரைச்சலில் நின்று விலகிவிடு. நல்ல கருத்தோடு பேசினாலும் உலக அலுவல்களில் ஈடுபடுவது நல்வாழ்வுக்குப் பெருந்தடையாக இருக்கிறது.
- ஏனென்றால், பயனற்ற செயல்களால் நாம் எளிதில் கறைப்படுகின்றோம், சிறைப்படுகின்றோம்.
- பேசாமலும் மனிதர் மத்தியில் இல்லாமலும் இருந்திருக்க வேண்டும் என்று பன்முறை நான் விரும்பியிருக்கிறேன்.
- மனச்சான்றைப் புண்படுத்தாமல் நாம் எளிதில் மௌனத்திற்குத் திரும்புவதில்லை. என்றாலும் ஏன் இத்தனை ஆர்வத்தோடு நாம் பேசுகிறோம்? ஒருவர் ஒருவரைப் பற்றி ஏன் நாம் கட்டுக்கதை சொல்லுகிறோம்?
- நாம் இவ்வளவு ஆவலுடன் பேசுவதற்குக் காரணம், மிகைப்படப் பேசிப் பிறரிடமிருந்து ஆறுதல் பெற விழைவதும், பலவித சிந்தனைகளினால் சோர்வடைந்த இதயத்தை இலகு செய்ய ஆசிப்பதுமாகும்.
- நாம் அதிகமாக நேசிப்பவை அல்லது ஆசிப்பவை, அல்லது நமக்கு எதிரானவை என்று தோன்றுபவை பற்றிப் பேசுவதும் நினைப்பதுமே நமக்கு மிகுந்த மகிழ்ச்சி தருகின்றன.
- ஆனால், அந்தோ! அது பயனற்றது, பொருளற்றது.
- ஏனெனில், இந்தப் புற ஆறுதல் இறை ஆறுதலுக்குப் பெரும் தடையாக இருக்கிறது.
- எனவே, நேரம் பயனற்றுப்போகாதிருக்க, நாம் விழித்திருந்து செபம் செய்தல் வேண்டும்.
- பேசுவது சரி என்றால், நன்மை தரும் என்றால் நற்பயன் தருவனபற்றிப் பேசு
- தீய பழக்கமும், நமது முன்னேற்றத்தின் புறக்கணிப்பும் நாவடக்கமின்மைக்கு முக்கிய காரணங்களாக இருக்கின்றன.
- மாறாக, ஆன்மீகப் பொருள்பற்றி பக்தியாகக் கலந்து ஆலோசிப்பதும், சிறப்பாக, ஒத்த உள்ளத்தாலும், மனப்போக்காலும் தங்களை இறைவனோடு இணைத்திருப்பதும் ஆன்ம வளர்ச்சிக்குப் பெரிதும் துணைபுரிகின்றன.

**தொடரும்**

## திரு இருதயமே

உம் சிரசில்தான் முள்முடி கண்டோம்
இதயத்தை இறுக்கவும் முள்மகுடமா?
முள்வலியை மௌனமாகத் தாங்கிட
உள்வலி கண்டீர்
குருதி ஒழுக்கும் பற்றியெரியும்,
தீச்சுவாலையில் பரிசுத்தமான தோற்றமும்,
நாங்கள் உமக்கிழைத்த
நம்பிக்கை துரோகத்தை
நாளெல்லாம்
நினைவுபடுத்துகிறது.



வலியில் பிறந்தோம்
வலியில் வாழ்ந்தோம்
வலியில் இறந்தோம்
எங்களுக்கேற்படும்
வலிகள் பிறருக்காக
என்றால் வலிகள் ஒருநாள்
வரலாறாகிறது.

சுயநல வலிகள்
அடுத்தவருக்கு தாரை வார்க்கப்பட்டு
அவர்களை அநியாயமாக துன்புறுத்துகிறது.
மனுக்குலத்திற்கான உம் வலி
மறக்க முடியாத சரித்திரம்
அந்த சரித்திரத்தைப்
பின்பற்றி வாழ்வதில் தான்
எங்கள் மன அமைதி நிலைத்திடும்

பாப்பரசர் தினம்
16.06.2019

# மனம் மாற நீ தயாரா?

## உலக சமாதானத்தை முன்னிட்டு பரிசுத்த பாப்பரசரின் செய்தி -2019




பரிசுத்த பாப்பரசர் 2018ம் ஆண்டு 52வது உலக சமாதானத்தின்போது யுத்தத்தில் இருந்து சிறுவர்களை பராமரிக்க வேண்டும் என்ற அழைப்பை விடுத்தார்.

"சமாதானம் ஒரு சவால் அதை எப்போதுமே புதிதாக செயற்படுத்த வேண்டும்" என திருத்தந்தை கூறியுள்ளார். "சிறுவர்கள் துஸ்பிரயோகம் செய்யப்பட அல்ல, அவர்கள் பராமரிக்கப்படவே"

2018ம் ஆண்டு 52வது உலக சமாதான தினத்தின்போது இந்த விசேடமான செய்தி திருத்தந்தை அவர்களால் முன் வைக்கப்பட்டது. உலக சமாதானத்தின் தினமானது ஒவ்வொரு வருடமும் தை மாதம் 1ம் திகதி கொண்டாடப்படுகின்றது.

சென்ற வருட உலக சமாதானத்தின் தலைப்பானது "சமாதானசேவையில் சிறந்த அரசியல்" திருத்தந்தையின் செய்தியானது வத்திக்கான் ஆவணங்களை அடிப்படையாக கொண்டு சிறுவர்களின் எதிர்கால உரிமைகள் பற்றி கூறுகின்றது. ஆபிரிக்க நாட்டு கர்தினாலின் கருத்துப்படி "இளையோர்களின் எதிர்காலத்தில் மகிழ்ச்சியான சமாதானத்தை அனுபவிக்க கூடிய வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்படவில்லை. எமது வாழ்வின் எல்லா பக்கமும் சமாதானத்தை உருவாக்க வேண்டும், அதாவது வீட்டில், சமுதாயத்தில், வேலைத்தளத்தில் மற்றும் தேசத்தில்.

இந்த செய்தியானது சிந்திக்க தூண்டுவது சிறுவர்களின் தற்போதைய வாழ்க்கை நிலையின் குழப்பத்தினையே, எனவே அனைவரும் இதனை கண்நோக்கி அவர்களின் வாழ்வையும், உரிமைகளையும் பாதுகாக்க வேண்டும். ஆறில் ஒரு பிள்ளையாவது யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர் இதன் அடிப்படையில் யாராவது அவர்களுக்காக செயற்பட்டு அவர்களை பாதுகாக்க வேண்டும். ஏனெனில் அவர்களின் எதிர்கால மனித வாழ்வானது மிகவும் பெறுமதியானது.

திருத்தந்தையின் செய்தியானது "சமாதான சேவையில் சிறந்த அரசியல்" எனும் கருப்பொருளை அடிப்படையாக கொண்டு மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை வலியுத்துகின்றது.

"சமாதானத்தை கொண்டு வருவதே கிறிஸ்தவ சீடத்துவ பணியின் மையமாகும். இந்த அமைதியானது ஆண் பெண் யார் எல்லாம் சமாதானத்திற்காக காத்துக்கொண்டிருக்கின்றார்களோ அவர்கள் அனைவருக்காகவும் அர்ப்பணிக்கப்பட்டு வன்முறைக்கும் சேதங்களுக்கும் மத்தியில் மனித வரலாற்றிற்கு ஒரு அடையாளத்தை கொடுக்கின்றது.

"இயேசுவைப்பற்றி பேசும் ஒவ்வொரு குடும்பமும், சமுதாயமும், நாடும் அவர்களின் பன்முக தன்மையும், வரலாற்றையும் முன்வைக்கின்றனர். ஒவ்வொரு தனிப்பட்ட நபருக்கும் இது முதல் மற்றும் முன்னனி, வேறுபாடு மற்றும் பாகுபாடு அல்லாத் தன்மையுமாகும்". சிறந்த அரசியலின் சவால்களானது சமாதானத்தினை குறிப்பிடுவதாகும். இது வன்முறையின் பாதை பள்ளத்தாக்கில் மலரத் துடிக்கும் ஒரு நுண்மையான மலரைப் போன்றதாகும்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் கருத்துப்படி அரசியல் வாழ்க்கை முழுவதும் சமுதாயத்திற்கு ஒரு சேவை வடிவாக காணப்படவில்லை. இது அடக்குமுறை, முரண்பாடு, அழிவு மற்றும், எஞ்சியுள்ள ஒரு வன்முறையாக இருக்க முடியும் என்றால், இயேசு கூறியதன் படி "ஒருவர் முதல்வராக இருக்க விரும்பினால் அவர் அனைவரிலும் கடைசியானவராகவும் அனைவருக்கும் தொண்டராகவும் இருக்கட்டும்". (மத்-: 9:35) என்று வாழ்தல் அவசியமாகும்.

திருத்தந்தை மேலும் கூறுவதாவது அரசியல் அலுவல்கள் மற்றும் அரசியல் பொறுப்பானது யார் எல்லாம் தங்கள் நாட்டின் முன்னேற்றத்திற்காக பணி புரிய அழைக்கப்பட்டார்களோ அவர்கள் அனைவருக்கும் நாட்டு மக்களின் பாதுகாப்பை முன்னிட்டு செயற்படுத்த பொறுப்புண்டு என்பதோடு வாழ்க்கையின் அடிப்படை மரியாதையுடன் செயற்பட்டால், மக்களின் சுதந்திரம் மற்றும் கன்னியம் அரசியல் வாழ்வில் தொண்டு புரிவதற்கு ஒரு சிறந்த வடிவமாக அமையும்.

சமாதான சேவையில் சிறந்த அரசியல் என்பது மரியாதைக்குரிய அதேநேரத்தில் பரஸ்பர கடமைகளை அடிப்படையாக கொண்ட அடிப்படை மனித உரிமைகளை ஊக்குவிக்கின்றது, மற்றும் தற்போதைய எதிர்கால தலைமுறையினருக்கு நம்பிக்கை மற்றும் நன்றியுணர்வினை உருவாக்குகின்றது.

"அரசியலானது இளைஞர்கள் மற்றும் அவர்களின் அபிலாசைகளை திறன்பட வளர்க்கும் போது, சமாதானம் அவர்களின் கண்ணோட்டத்தில் வளர்கின்றது. இதனால் அவர்களின் முகங்கள் நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றது. 'நான் உன்னை நம்புகின்றேன்', நாம் எல்லோரும் பொது நலனுக்காக இணைந்து செயற்படலாம். எங்கள் சமுதாயங்கள் சமாதானத்தின் கைவினைஞர்களாக இருக்கவேண்டும், யார் கடவுளின் தூதர்கள் மற்றும் உண்மையான சாட்சிகளாக இருக்க முடியும், யார் மனித குடும்பத்தின் நல்வாழ்வின் சந்தோஷத்திற்காக வாழ்பவர்கள்.

மேலும் திருத்தந்தை இறுதியாக கூறியது "சமாதானத்தின் அரசியலானது எல்லா சூழ் நிலைக்கும் ஆழ்ந்த அக்கறையை கொண்டதும் எப்போதும் மனித பலவீன உள்ளுணர்வுகளை அறிந்து செயற்படவும் வேண்டும். எமது மீட்பரின் தாயான அன்னை மரி மனித குலத்திற்காக பாடிய மரியன்னையின் பாடல் ஒரு எடுத்துக்காட்டாக உள்ளது.

**பாப்பிறை மறைபரப்பு சபை தேசிய செயலகம்**



அருட்பணி. பசில் ரொஹான் பர்னாந்து
தேசிய இயக்குனர்
பாப்பிறை மறைபரப்பு சபை

**பாப்பரசர் தினத்தை முன்னிட்டு பாப்பிறை மறைபரப்பு சபைகளின் தேசிய இயக்குனரின் செய்தி**

"நீங்கள் உங்கள் உடைகளைக் கிழித்துக் கொள்ள வேண்டாம், இதயத்தைக் கிழித்துக்கொண்டு உங்கள் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பி வாருங்கள்" (யோவேல் 2:13) எனும் இறைவார்த்தைக்கு எங்கள் முழு கவனத்தையும் செலுத்துகையில், இவ் வார்த்தையின் படி வாழ எமக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. பாப்பரசர் தினமானது ஆனி மாதம் 16ம் திகதி 2019 அன்று கொண்டாடப்படுகின்றது. "மனம் மாற நீ தயாரா?" எனும் கருப்பொருளுக்கு ஏற்ற அர்த்தமுள்ள விதமான புதிய வாழ்வை வாழ எம்மை அழைக்கின்றது.

உண்மையில் சமாதானம், நல்லிணக்கம் போன்றவையின் மூலம் இயேசுவை வாழ்வாக்கி, இவ்வுலகில் புனித வாழ்வை வாழும் எங்கள் அன்பு பாப்பரசர் பிரான்சிஸ் அவர்கள் புனித வேர்ஜின் மேரியைப் போல் ஏழ்மை நிறைந்தவராக திகழ்கின்றார். அதனாலேயே பிரான்சிஸ் அவர்கள் இயேசுவின் பிரதிநியாக திகழ்கிறார். இவ்வாறு பாப்பரசரின் வாழ்வில் நான் கண்ட புனித தன்மையை கூறி விளக்க வார்த்தைகள் போதாது. அத்தோடு, பிரான்சிஸ் அவர்கள் கிறிஸ்துவை பின்பற்றுவதனால் அனுதினமும் சாட்சியம் புரிவதையும் சொல்லியாகவே வேண்டும். சென்ற நாட்களில் நடைப்பெற்ற ஓர் கண்கலங்கும் நிகழ்வாக பரவலாகிவந்த சூடானின் தலைவர் மற்றும் பொறுப்பாளர்களின் முன்னிலையில் சமாதானத்துடனும், கருணையுடனும் முழுமையாக அடி பணிந்து வணங்கி அவர் கூறியதாவது, "சமாதானமாக வாழுங்கள்" எனும் அவரின் வேண்டுகோளை அங்கு சமர்ப்பித்தார். சமாதானம் என்பது இறைவன் எமக்களித்துள்ள விலைமதிக்கத்தக்க ஓர் பரிசாகும் அப்பரிசை செயற்படுத்துவதும், பராமரிப்பதும் எங்களின் கடமையாகும். அதை எம் பாப்பரசர் செயற்படுத்தி காட்டி எமக்கு ஓர் முன்னுதாரணமாக திகழ்கின்றார்.

அதேபோல் எம் நாட்டில் பாஸ்கா ஞாயிறன்று நடைப்பெற்ற வாழ்வை அழிக்கும் கொடூர நிகழ்வை ஓட்டி எமது பேராயர் அதிமேதகு. மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையும் பாப்பரசர் கூறியவாறே "ஆழமான மனமாற்றத்தினால் சமாதானம் பெருகுகின்றது. இவ்வாறு சமாதானம் பெருகுவதற்கு மனம் மாற்றம் அடைய வேண்டும்" என்றார். அப்பொழுது அவர் அமர்ந்து, பன்னிருவரையும் கூப்பிட்டு, அவர்களிடம், "ஒருவர் முதல்வராக இருக்கவிரும்பினால் அவர் அனைவரிலும் கடைசியானவராகவும் அனைவருக்கும் தொண்டராகவும் இருக்கட்டும்" என்றார். (மாற்கு 9:35) இவ் இறைவார்த்தை மனதிற்கு சிறந்ததாகவே தென்படுகிறது.

மனம் மாற நீங்கள் தயாரா? எனும் கேள்வியின் மூலம் உங்கள் மனதை சோதித்துப் பார்த்துக்கொள்ளுங்கள். அதனூடாக ஆலோசனைகள் தானாகவே ஏற்படும். மனமாற்றம் என்பது மனதை திறப்பது. மேலும் விரிவாக கூறுவோமானால் திருவிவிலியத்திற்கு முன் எழுதப்பட்ட எபிரேய ஏடுகளில் மனமாற்றத்தை 'ஷுப்' எனவும், கிரேக்க மொழியில் 'மெடெனொய்யா' எனவும் ஆழமான கருத்தை தருகின்றன. மெய்யாகவே மனமாற்றத்தை தவறான வழியில் இருந்து நீக்கி, சரியான வழியினுள் கொண்டுசெல்வதன் மூலம சிறந்த ஆலோசனைகளை முன்வைத்து, சுதந்திரமாக மனதை திறந்து செயற்படலாம். Misericordia Dei அப்போஸ்தலிக்க மடலில் (பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் அவர்கள் 2002) ஒப்புரவின் விலைமதிப்பை காட்டி, நிரந்தர மனித வாழ்வை மாற்றத்திற்குள் அழைக்கின்றார்.

'மனமாற்றம்' என்பதோடு, 'ஒப்புரவு' என்பதை இறைவனின் கருணையில் அனுபவித்தல். (பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் அவர்கள் "Dives in Misericordia" எனும் அறிவுரை மடலின் மூலம் சுட்டிக்காட்டுகிறார்.. இவ்வாறு மனமாற்றத்தின் மூலம் புனித வாழ்வு வாழும் எங்கள் பரிசுத்த...

தொடர்ச்சி 15ம் பக்கம்..

### பாப்பரசர் தினத்திற்கான நிதிசேகரிப்பு – 2018

| மறைமாவட்டம் | தொகை |
|---|---|
| அநுராதபுரம் | 42,500.00 |
| பதுளை | 71,336.00 |
| மட்டக்களப்பு | 58,680.00 |
| சிலாபம் | 348,820.00 |
| கொழும்பு | 1,350,722.00 |
| காலி | 87,200.00 |
| யாழ்ப்பாணம் | 145,384.00 |
| கண்டி | 129,231.00 |
| குருநாகலை | 155,910.00 |
| மன்னார் | 141,570.00 |
| இரத்தினபுரி | 79,005.00 |
| திருகோணமலை | 55,320.00 |
| **மொத்தம்** | **2,665,678.00** |

இலங்கை ஆயர் பேரவையினாலேயே இந்நிதி சேகரிப்பு ஆரம்பிக்கப்பட்டது. இலங்கை பாப்பிறை மறைபரப்புச் சபைகளின் தேசிய காரியாலத்தின் மூலம் இலங்கைக்காக நிதிச்சேகரிப்பு தொகையை உரோமைய வத்திக்கானின் திருத்தந்தையின் தனிப்பட்ட பிறர்சிநேக பணிகளுக்கு உடனடியாக அனுப்பி வைக்க வேண்டியுள்ளதால் நன்கொடைகளை மறைமாவட்ட இயக்குனர்கள் அல்லது நிதிச் செயலாளர்களுக்கு கிடைக்கச் செய்யவும்.

தேசிய இயக்குனர்
பாப்பிறை மறைபரப்புச் சபைகள்,
19, பல்கம் இடம், கொழும்பு – 08.
Tel/Fax : 011 2685673
email : ndpms@sltnet.lk

# உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்ற தற்கொலை குண்டுத்தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு இலங்கையில் பல ஆலயங்களில் மக்கள் அஞ்சலி செலுத்தி மெழுகுவர்த்தி ஏற்றி அவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக மன்றாடினரார்கள் அவற்றில் சில நகழ்வுகள்.

## கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தில்...



## கட்டுவாப்பிட்டிய புனித செபஸ்தியார் தேவாலயத்தில்...



## கீரபதெனிய தேவாலயத்தில்...



## கொட்டுகொட தேவாலயத்தில்...



## கல்கிசை தேவாலயத்தில்...



## நீர்கொழும்பு, பெரியதெரு தேவாலயத்தில்



## தெஹிவளை தேவாலயத்தில்...



## பயாகல தேவாலயத்தில்...



இவ்வான்மாக்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காகவும், காயப்பட்டவர்கள் குணமடையவும் வேண்டி ஞானஒளி பிரார்த்திக்கின்றது.

# தியாகத் தாய்

தாய் தன் ஒரே செல்லமகனை அன்போடு வளர்த்தார். மகன் வயதிலும் அறிவிலும் வளர வளர தன் தாயின் அரவணைப்பிலிருந்து பிரிய ஆரம்பித்தான். காரணம் அவனுடைய தாயின் கையில் கண்ட வெண்தழும்புகள், பார்க்கவே அவனுக்கு அருவருப்பாக இருந்தது.



ஒருநாள் ‘எப்படி அத்தழும்புகள் ஏற்பட்டன?’ என தாயிடம்கேட்டான். தாய் கண்ணீருடன் சொன்னாள். ‘மகனே! நீ சிறு குழந்தையாயிருந்தபோது நாமிருந்த வீடு தீப்பற்றிக் கொண்டது. வெளியே சென்று திரும்பிவந்த நான் வீடு எரிவதைப் பார்த்து பதறினேன். நீ உள்ளே தூங்கிக் கொண்டிருந்தாய். எவ்வளவு கதறியும்யாரும் உதவவில்லை. நானே எரியும் வீட்டுக்குள் புகுந்து உன்னை தூக்கிக்கொண்டு வெளியில் வரும்போது நெருப்பு தாக்கி என் கை, காலெல்லாம் வெந்து விட்டன. அந்த நெருப்பு புண் தழும்புதான் இது’ மகன் இதயம் உடைந்து அந்த அழகிய கைகளில் முத்தமிட்டான்.

**அன்பை வாங்கவும், விற்கவும் முடியாது அன்பிற்கு விலை அன்புதான்**



## விவிலியம் அறிவோம்



**விவிலியம் வாசிக்க...**

### விவிலியப் பகுதி



**மாற்கு நற்செய்தி**

**அதிகாரங்கள்**

**02 முதல் 03 வரை**

26. முடக்கு வாதமுற்றவரை இயேசுவிடம் எப்படி கொண்டு வந்தார்கள்?
27. முடக்கு வாதமுற்றவரைப் பார்த்து, இயேசு என்ன சொன்னார்?
28. அல்பேயுவின் மகனான லேவியை எங்கிருந்து அழைத்தார்?
29. இயேசு மறை நூல் அறிஞர்களிடம் என்ன சொன்னார்?
30. இயேசுவின் சீடர்கள் நோன்பு ஏன் இருக்க வில்லை என்று கேட்டதற்கு என்ன சொன்னார்?
31. தாவீது இறை இல்லத்திற்குள் சென்று அர்ப்பண அப்பத்தை எடுத்து உண்டபோது தலைமைக் குருவாயிருந்தவர் யார்?
32. இயேசு மீண்டும் எங்கே சென்றார்?
33. ‘எழுந்து நடுவே நில்’ என்று இயேசு யாரிடம் சொன்னார்?
34. இயேசுவை எப்படி ஒழிக்கலாம் என்று அவருக்கு எதிராய் சூழ்ச்சி செய்தவர் யார்?
35. இயேசு தன் சீடரோடு எந்த கடற்கரைக்கு சென்றார்?

15ம் பக்கம்


**மாணவர்களே! உங்களது ஆக்கங்களை எமக்கு எழுதி அனுப்ப வேண்டிய முகவரி**

**இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08.**

**மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com**




யுகேஸ். தரம் - 4 இராஜகிரிய




ஜோன் றிசான் தரம் - 5 இராஜகிரிய

ஆறு வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்



தரப்பட்டுள்ள படங்களைப் பாருங்கள்.




அவை ஒவ்வொன்றும் 10 கட்டளைகளில் எந்த கட்டளையைச் சுட்டிக் காட்டுகின்றன? என கண்டு பிடித்து எழுதி எமக்கு அனுப்புங்கள்.

பெயர், முகவரி, பாடசாலை, வகுப்பு போன்ற விபரங்களை எழுதும் முதல் 5 பேர்களின் விபரங்கள் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

ஜூன் 10ம் திகதிக்கு முன் மேலே கொடுக்கப்பட்டுள்ள விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.




# உன்னோடு ஒரு நிமிடம்



# அழாதே நண்பா நீ ஆற்றல் மிக்கவன்

ஒரு நாள் தான் வாழ்வு என்றாலும் இறக்கை விரித்து பறக்கவில்லையா ஈசல்? பாரி தேர் கொடுப்பான் என்றா பிரபஞ்சத்தில் கொடிகள் முளைக்கின்றன? கிடைப்பதைப் பற்றி ஏறுவதில்லையா?

காற்றின் ஈரம் உறிஞ்சியே உயிர் வாழும் வேர்களின் வரலாற்றை வாசித்ததில்லையா?

எத்தனை முறை விலக்கி வைத்தாலும் ஓடிவந்து ஒட்டிக்கொள்ளும் பாசியை நீ பார்த்ததில்லையா?

தூரத்துத் தழை பறித்தே கழுத்து நீண்ட கதை ஒட்டகச் சிவிங்கிக்கு உண்டென அறிவாயோ

அழாதே நண்பா நீ ஆற்றல் மிக்கவன்.

தென்னை மரத்தையே வளைக்கும் வீரம் தும்பிக்கையில் இருந்தாலும் குச்சியைக் கண்டு பயப்பட்டு பிச்சை எடுக்கும் குணம் யானையின் குணமன்று பாகனின் குணமது.

யானையைப் போல் நீ இருந்தாலும் பாகனாய் நின்று உன்னை அச்சுறுத்துவது எதுவெனக் கண்டுபிடி!

கயிற்றில் நடப்பவனின் கையில் வைத்திருக்கும் கோலில் இருக்கிறது கீழே விழாமல் இருப்பதற்கான விசை.

உன்னை அந்தரத்தில் தாங்கும் விசையெதுவெனக் கண்டுபிடி!

நிலாவைப் பற்றிய எல்லாப் புனைவுகளும் பொய்யெனப் போயிற்று அடியெடுத்து வைக்கும் தூரமாய் அருகில் வந்துவிட்டது.

அவ்வளவு நெருப்பும் அந்நாள் வரை அம்மலைக்குள்தான் மறைந்துபோய் இருந்திருக்கின்றது. எல்லோருக்குள்ளும் கனிந்து கொண்டுதான் இருக்கிறது கண்காணா எரிமலை.

அழாதே நண்பா உனக்குள்ளும் இருக்கிறது மலையைப் புரட்டும் ஆற்றல்! நிலவைத் தொடும் வீச்சு!!

நான் உனக்குப் பற்பல ஆற்றல்களையும் திறமைகளையும் கொடுத்துள்ளேன். நீ வெளிக் கொண்டுவராத திறமைகள் உன்னில் புதைந்து கிடக்கின்றன. நீ வெளிக்கொண்டு வராத பல ஆற்றல்கள் உனக்குள்ளே புதைந்து கிடக்கின்றன. உனக்குள்ளே நான் கொடுத்த பல கொடைகள் மறைந்து கிடக்கின்றன.

உன்னுள்ளே உயர்ந்த பொக்கிஷங்கள் உண்டு. உன்னுள்ளே ஆக்கும் திறன் செயல்படுத்தும் திறமைகள் உள்ளன. அவற்றைத் தேடிக் கண்டுபிடி. அவற்றைப் பயன்படுத்து. உனது சுயமதிப்பை உயர்த்திக் காட்ட அவற்றை பயன்படுத்து.

உன் கொடைகளை எண்ணிப் பார்த்து நீதான் மிகச் சிறந்த படைப்பு என்பதை அறிந்துகொள். நீதான் எனது மிகச் சிறந்த படைப்பு. நீதான் எனது உயர்ந்த அதிசயம். நீதான் எனது படைப்பின் சிகரம். இத்தகைய ஆற்றல்களைக் கொண்ட நீ நான் தாழ்வானவன் என்று எண்ணாதே! நான் மதிப்பற்றவன் என்று கருதாதே! உன்னையே குறைவாக மதிப்பிடாதே! உன்னையே வெறுத்து ஒதுக்காதே!

மீண்டும் கூறுகின்றேன், என் படைப்பில் உயர்ந்தவர் நீ! அதிசயமானவன் நீ! மீண்டும் மீண்டும் உன்னிடம் நான் ஒன்று கூற ஆசைப்படுகின்றேன் நீ என் படைப்பின் அற்புதம். எனது வார்த்தைகளைக் கேள். நீதான் என் படைப்பின் அதிசயம். இப்பொழுது இந்த நிமிடத்தில் நான் உன்னோடிருக்கின்றேன்.

இந்த நிமிடம் உன் வாழ்வின் திருப்பு-முனை முன்னதாக உன் வாழ்வில் நடந்ததெல்லாம் நீ உன் தாயின் கருவினிலே உறங்கின காலமாயிருக்கட்டும்.

✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻

# போதைகள் மறையட்டும்



போதை என்றால் நம் அனைவருடைய எண்ணத்தில் பளிச்சென்று நினைவுக்கு வருவது குடிகாரர்களைத் தான், ஆனால் அதுமட்டும் போதை அல்ல, நம் வாழ்வில் எவற்றிற்கெல்லாம் அளவுக்கு அதிகமாக இடம் கொடுக்கின்றோமோ அவை எல்லாம் போதை தான்.


எமது நாடு இன்று சுயநலம் என்ற போதைக்குள் சிக்கிக் கொண்டு ஊசலாடுகிறது. கொலை, கொள்ளை, பாலியல், வன்மம் இவற்றிற்கு இன்று பஞ்சமில்லாமல் போய்விட்டது. காரணம் பணம், பதவி என்ற போதை இன்று மனித நேயத்தையே மறந்துபோக, மறுத்துப்போக வைத்துவிட்டது. பணத்தைக் கொடுத்து இனவெறியை தூண்டிவிடும் ஒரு சக்தி. அதிகாரத்தைப் பயன்படுத்தி அநியாயங்கள் மூடி, மறைக்க உதவும் மற்றுமொரு சக்தி. இவை எல்லாம் இன்று எதற்கு? பதவி என்ற போதையே இதற்கு காரணம். இன்று பதவியை அடைய எத்தனையோ குறுக்கு வழிகளை கையாளுகிறார்கள். பதவி சுகத்தை அனுபவிப்பவர்களுக்கு அது இல்லாமல் இருக்க முடியாது. அதனால் அச்சுகத்தை அனுபவிக்க பலரை பலி கொடுக்கத் தயாராகுகின்றார்கள். எத்தனையோ போலிகளை உருவாக்குகின்றார்கள். பதவியால் இன்று எண்ணற்ற குடும்பங்கள் தெருக்களிலே மகுடங்கள் தலைமாற கூடியவை என்று தெரிந்தும், பதவி என்ற மகுடத்தை தக்கவைத்துக்கொள்ள எத்தனையோ தகாத வழிகளைத் கையாளுகின்றார்கள். பதவி என்ற போதையைப் பருக மனிதாபிமானமற்ற முறையில் அப்பாவி மக்களின் உயிர்களை, நல்வாழ்வை, நாசமாக்குகின்றார்கள். நம் சுதந்திர நாட்டிலே சுதந்திர காற்றை சுவாசிக்க முடியால் நம் நாட்டு மக்கள் திணறுகின்றார்கள். இதற்கு முக்கிய காரணம் சாதி, இன. மத பிரச்சினையே, இதை “ஒழிப்போம்” என்று கூறிக்கொண்டு பலர் அதைப் பக்குவமாய் வளர்க்கின்றார்கள். இன்று மனித உள்ளங்கள் இறுகிப்போய்விட்டது. இப்படியான பயங்கரவாத போதை வந்ததால்.

ஆண்டவர், வாழுகின்ற ஆலயத்தை இடித்துவிடும் அளவுக்கு போதை பரவிவிட்டது. சாதி, இன, மத என்ற பெயரில் வெறிபிடித்து மனிதனை மனிதன் வெட்டி சாய்கின்றான். தன் பதவிக்காக மனித இனத்தை அழித்தொழிக்கின்றான். இன்று எம் நாட்டு மக்கள் நிம்மதியாக வாழ்வதற்கு இந்த போதையில் இருந்து விடுபட்டு சமத்துவக் காற்றை சுவாசித்தால்தான் நாடு அமைதி பெறும்.

> **ஆண்டவர் வாழுகின்ற ஆலயத்தை இடித்துவிடும் அளவுக்கு போதை பரவிட்டது. சாதி, இன, மத என்ற பெயரில் வெறிபிடித்து மனிதனை மனிதன் வெட்டி சாய்கின்றான்.**


இன்றைய இளைஞர்களே வாலிபர்களே, நீங்கள் தான் இன்று முன் யோசனையுடன், முற்போக்குடன் நடந்துகொள்ள வேண்டும். கட்சி பேதம், இன பேதம், மதபேதம் என்று மூளையை சலவை செய்ய விடாதீர்கள். இன்று உங்களை பயன்படுத்தியே பல காய்களை நகர்த்த பார்கின்றார்கள் அதில் விழுந்து விடாதீர்கள்.

அன்பு செய்யவே கடவுள் மனிதனைப் படைத்தார். நடந்தவை நடந்தவையாகவே இருக்கட்டும். அனைத்தையும் ஏற்றுக்கொள்ளும் மனதெளிவைப் பெறுங்கள். பழிவாங்க எண்ணாதீர்கள். மனிதர்களை விட பொருள்களை நேசிக்காதீர்கள். பதவிக்காக பலருடைய









வாழ்க்கையையும் பயன்படுத்தாதீர்கள். பணத்தால் யாருடைய வாழ்வையும் விலைக்கு வாங்காதீர்கள், கொலை கொள்ளை, வன்மங்கள் என்பவற்றால் யாரையும் அழிக்காதீர்கள்.

## மாணவர்களே

**நம் நாடு, நம் மக்கள்**
**நம் சகோதர சகோதரிகள்**
**என்ற மனப்பான்மையோடு**
**சமத்துவத்தை வளரவிடுங்கள்.**
**சகோதர பாசத்தோடு வாழுங்கள்.**
**அல்லல்களை அகற்றுங்கள்.**
**நல்லவைகளை விதையுங்கள்**

**போதைகள் மறையட்டும்.**

# ஏந்த ஒரு மனிதரும், வாழ்வுக்குப் பொருத்தமில்லாதவர் அல்ல



ஏந்த ஒரு மனிதரும், வாழ்வோடு ஒத்துவராதவராய், வாழ்வுக்குப் பொருத்தமில்லாதவராய் ஒருபோதும் இருக்கமுடியாது என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின், சனிக்கிழமையன்று, தன்னைச் சந்திக்க வந்திருந்த ஒரு குழுவினரிடம் கூறினார். பதிவாகி-யுள்ளன.

பொதுநிலையினர், குடும்பம் மற்றும் வாழ்வு திருப்பீட அவையும், “Heart in a Drop” அறக்கட்ட-ளையும் இணைந்து நடத்திய கருத்தரங்கில் கலந்து-கொண்ட ஏறத்தாழ 300 பிரதிநிதிகளை, வைகாசி 25, சனிக்கிழமையன்று வத்திக்கானின் கிளமெந்தினா அறையில் சந்தித்து உரையாற்றிய திருத்தந்தை, இவ்வாறு கூறினார். ஒவ்வொரு குழந்தையும் ஒரு கொடையாகும், அது, ஒரு குடும்பத்தின் வரலாற்றை மாற்றக்கூடியது என்றும், இந்தக் குழந்தை, வரவேற்-கப்பட்டு, அன்புகூரப்பட்டு, பராமரிக்கப்பட வேண்டும் என்றும் திருத்தந்தை கூறினார்.

மிக வலுவற்ற நிலைகளில் பிறக்கும் குழந்தை-கள், வாழ்வோடு ஒத்துவராதவர் என, வீணாக்கும் கலாச்சாரத்தில் புறக்கணிக்கப்படுகின்றனர் என்றுரைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கருவில் வளரும் குழந்தை பரிசோதிக்கப்படுவதால் ஏற்படும் எதிர்மறை விளைவுகள் குறித்தும் எச்சரித்தார்.

ஒரு தாய் கருவுற்ற முதல் வாரங்களில், வளரும் குழந்தையைப் பாதித்துள்ள நோய்கள் மற்றும் உருவ அமைப்புகளின் பாதிப்பு பற்றிப் பரிசோதிக்கும் நவீன தொழில்நுட்பங்கள் பற்றிக் கூறியத் திருத்தந்தை, நோய் என்ற சந்தேகத்தின்பேரில் அடிக்கடி வெளியாகும் பரிசோதனை முடிவுகள், கர்ப்பகால அனுபவத்தை மாற்ற முடியும் என்றும், இவை, பெண்கள் மற்றும், தம்பதியரை மனச்சோர்வுக்கு இட்டுச் செல்கின்றன என்றும் கூறினார்.....

தொடர்ச்சி 15ம் பக்கம்







## திருத்தந்தையின் டுவிட்டர் செய்தி...

“இயேசு தரும் அமைதி, ஒரு கொடையாகும். அதனை மனிதச் செயல்களால் அடைய இயலாது. இயேசு தரும் அமைதி வித்தியாசமானது, அது அனைத்தையும் தாங்கிக்கொள்ளக் கற்றுத் தருகிறது, நம் வாழ்வின் சுமைகளை, இன்னல்களை, பணியை, அனைத்தையும் தாங்கிக்கொள்ளவும், துணிச்சலுடன் முன்னோக்கிச் செல்லவும் உதவுகின்றது”

“தீவிர நோய்களோடு வாழ்ந்துகொண்டிருப்போருக்காக செபிப்போம். இறைவனின் கொடையான வாழ்வை அதன் தொடக்கத்திலிருந்து இயற்கையான முடிவுவரை, பாதுகாப்போம். தூக்கியெறியும் கலாச்சாரத்திற்கு நம்மை உட்படுத்தாதிருப்போம்”

“இறைவார்த்தைக்கு செவிமடுப்பது, திருஅருளடையாளங்கள், சகோதரத்துவ வாழ்வு, மற்றவர்களுக்கு சேவையாற்றுதல் ஆகியவைகள் வழியாக, ஆண்டவராம் இயேசு கிறிஸ்துவோடு இணைந்திருப்போம்”

“கடவுளுடைய வார்த்தை உயிருள்ளது” (எபிரேயர் 4:12) அது, முதிர்ந்த வயதாவதோ, இறப்பதோ இல்லை, மாறாக, என்றென்றும் நிலைத்திருக்கிறது.


“ஒவ்வொரு தனி மனிதருக்கும், படைப்பு அனைத்திற்கும் வழங்கப்படும் அக்கறை, குடும்பத்தின் முன்னேற்றம் என்ற கருத்தை வளர்ப்பதன் பொருள்”

“கடவுள் தம்மை நமக்கு வழங்குகிறார், ஆனால் தம்மையே வலுக்கட்டாயமாக ஒருபோதும் திணிப்பதில்லை, அவர் நம் உள்ளத்திற்கு ஒளியூட்டுகிறார், ஆனால் நம் பார்வைத்திறனை ஒருபோதும் பறிப்பதில்லை”

“இன்றும் எத்தனையோ கிறிஸ்தவர்கள், கிறிஸ்துவின் அன்புக்காக துன்புறுத்தப்பட்டும், கொல்லப்பட்டும் வருகின்றனர். அவர்கள், தங்கள் உயிர்களை அமைதியில் வழங்குகின்றனர், ஏனெனில், அவர்களின் மறைசாட்சிய மரணம், செய்தியாகும் தகுதி பெறுவதில்லை. தொடக்க நூற்றாண்டில் இறந்த மறைசாட்சிகளின் எண்ணிக்கையை விட இன்று கிறிஸ்தவ மறைசாட்சிகளின் எண்ணிக்கை கூடுதலாக உள்ளது”

“நம்முடைய குறைபாடுகள், மடிதல்கள் ஆகியவற்றிலிருந்து நாம் மீண்டும் எழுவதற்கு, தூய ஆவியாரே உதவுகிறார், ஏனெனில், நம் வாழ்விலும், நம் ஆன்மாக்களிலும், பல காயங்களும், தோல்விகளும் உள்ளன. புது வாழ்வுக்கு பிறக்கவேண்டும் என்பதே, உயிர்ப்பு தரும் செய்தி”

# திருஅவைக்கு விரைவில் இரு புதிய புனிதர்கள்



திருஅவைக்கு இரு புதிய புனிதர்கள் மற்றும், ஒரு புதிய அருளாளரை அறிவிப்பது தொடர்பான ஆவணங்களைத் வெளியிடுவதற்கு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இத்திங்களன்று அனுமதியளித்து-ள்ளார். புனிதர் மற்றும் அருளாளர் நிலைகளுக்கு உயர்த்தும் பணிகளையாற்றும் பேராயத் தலைவர், கர்தினால் ஆஞ்சலோ பெச்சு அவர்கள், வைகாசி 13, திங்களன்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களைச் சந்தித்து, இரண்டு அருளாளர்கள் மற்றும், ஒரு வணக்கத்துக்குரியவரின் பரிந்துரைகளால் இடம்பெற்-றுள்ள புதுமைகள், இன்னும், ஐந்து இறைஊழியர்களின் வீரத்துவப் புண்ணியம் நிறைந்த வாழ்வு குறித்த

உரோமையில் பிறந்த அருளாளர் Giuseppina Vannini (7,ஜூலை,1859-23,பிப்.1911) அவர்கள், புனித கமில்லஸ் அருள்சகோதரிகள் சபையை நிறுவியவர்.

பிரேசில் நாட்டைச் சேர்ந்த அருளாளர் Dulce Lopes Pontes (26 மே,1914-22 மே,1992) அவர்கள், இறையன்னையின் அமல மறைப்பணியாளர் அருள்சகோதரிகள் சபையைச் சார்ந்தவர்.

இத்தாலியரான வணக்கத்துக்குரிய அமலமரியின் லூசியா அவர்கள் (26,மே 1909-4,ஜூலை 1954) பிறரன்பு சிறிய சகோதரிகள் சபையைச் சார்ந்தவர்.

இம்மூவரின் பரிந்துரைகளால் இடம்பெற்றுள்ள புதுமைகள் மற்றும் ஏனைய ஆவணங்களை, திருத்தந்தை ஏற்றுக்கொண்டார்.

மேலும், இத்தாலியர்களான இறைஊழியர்கள் ஆயர் Giovanni Battista Pinardi, அருள்பணி Carlo Salerio, இஸ்பானியரான மரியா கழகத்தின் அருள்பணி Domenico Lázaro Castro, பிரேசில் நாட்டவரான கப்புச்சின் துறவி Salvatore da Casca, இத்தாலியில் பிறந்து அர்ஜென்டினாவில் இறைபதம் சேர்ந்த Maria Eufrasia Iaconis ஆகிய ஐவரின் வீரத்துவப் புண்ணியம் நிறைந்த வாழ்வு குறித்த விவரங்களையும் திருத்தந்தை அங்கீகரித்துள்ளார்.

# உலக மயமாக்கப்பட்டு வருகிறது பாராமுகம்

இவ்வாண்டு சிறப்பிக்கப்பட உள்ள புலம்பெயர்ந்தோர் உலக நாளுக்கென “புலம்பெயர்வோரைப் பற்றி மட்டு-மல்ல” என்ற தலைப்பில், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஒரு செய்தியை வெளியிட்டார். இறையரசு இவ்வுலகில் மறைபொருளாக பிரசன்னமாக உள்ளது என்பதை நம் விசுவாசம் உறுதிச் செய்கின்றபோதிலும், இவ்வுலகில் எதிர்கொள்ளப்படும் அநீதிகளும், பாகுபாடு-களும், சமூக மற்றும் பொருளாதார சரிநிகரற்ற நிலை-களும், பெரும் தடைகளாக இருப்பதையும், மிகவும் ஏழை மக்களையே அவை பாதிப்பதையும் பார்த்து கவலையே அதிகரிக்கின்றது என, தன் செய்தியில் சுட்டிக்காட்டியுள்ளார், திருத்தந்தை.

பாராமுகம் என்பது, இன்றையச் சூழலில், உலக மயமாக்கப்பட்டு வருகின்றது எனவும் தெரிவித்-துள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், புலம் பெயர்வோர், மிகவும் கீழ்த்தரமாக நோக்கப்பட்டு, இச்சமூகத்தின் அனைத்து தீமைகளுக்கும் அவர்களே காரணம் என்பதுபோல் நடத்தப்படுகிறார்கள் எனவும்,



தன் செய்தியில் கவலையை வெளியிட்டுள்ளார்.

ஆகவே, இன்றைய பிரச்னைக்குக்காரணம், புலம்பெயர்ந்தவர்கள் அல்ல, மாறாக, நாம் கொண்டி-ருக்கும் வீண் அச்சமே என்பதையும் சுட்டிக்காட்டியுள்ள திருத்தந்தை பலவேளைகளில் நம் எண்ண-ங்கள் சகிப்பற்ற தன்மையுடையதாக, திறந்த மனமில்லா-ததாக, நம்மையறியாமலேயே இனவெறி கொண்டதாக இருப்பதே இதற்கு காரணம் எனவும் தன் செய்தியில் கூறியுள்ளார். இது புலம்பெயர்ந்தோர் பற்றியதல்ல, மாறாக நம் பிறரன்பு பற்றியது எனக்கூறும் திருத்தந்தை, பிறரன்பு செயல்கள் வழியாகவே நம் விசுவாசத்தை வெளிக்காட்ட முடியும் என கூறியுள்ளார். இந்த உலக நாள், புலம்பெயர்ந்தோர் பற்றியதல்ல மாறாக, நம் மனிதகுலம் பற்றியது,..

தொடர்ச்சி 15ம் பக்கம்



# இவ்வாறு இறைவனிடம் வேண்டுங்கள் (மத் 6:9)

பகுதி – 19

## கொடுப்பதே இறைவேண்டல்

செபிக்கும் உதடுகளைவிட, உதவும் கரங்களே மேலானவை என்றார் புனித அன்னை தெரேசா. ஒரு பழுத்த ஆன்மீகவாதி மட்டுமே இப்படிச் சொல்ல முடியும். அன்னை தெரசா செப வாழ்வில் மிகுந்த பற்றுள்ளவர். நற்கருணை ஆண்டவர்முன் செபிக்காமல், அன்றாடப் பணிகளைத் தொடங்குவதுமில்லை, முடிப்பதுமில்லை. ஆனாலும், அவரே இப்படிச் சொல்லியிருக்கிறார் என்றால், உண்மையான செபம் சொற்களில் அல்ல, செயல்களில்தான் அடங்கியிருக்கிறது என்பதை வலியுறுத்தவே.

விவிலியம் செயல்வழிச் செபத்துக்கே அதிக முதன்மை அளிக்கிறது என்பதை எளிதில் உணரலாம். செயலற்ற நம்பிக்கை பயனற்றது (யாக் 2:20), நம்பிக்கை செயல்வடிவம் பெறாவிட்டால் தன்னிலே உயிரற்றதாயிருக்கும் (யாக் 2:17) என்றார் திருத்தூதர் யாக்கோபு. எனவே, நம்முடைய செபம் செயல்களில் வெளிப்பட வேண்டும். எத்தகையச் செயல்கள்?

நிலைவாழ்வுத் தேடலில் அவருக்குக் குறைவாக இருந்தது தம்மிடமிருந்த செல்வத்தைப் பகிர்வதும், கொடுப்பதும், இழப்பதும் மட்டுமே. அதனைச் செய்ய அவர் முன்வந்திருந்தால் அவர் நிலைவாழ்வைப் பெற்றிருப்பார். அந்தச் செல்வர் ஏமாற்றமடைந்தார். ஆனால், இன்னொரு செல்வர் தமது செல்வத்தைப் பகிர்ந்துகொள்ள முன் வந்ததால், இயேசுவின் பாராட்டையும் மீட்பையும் பெற்றுக்கொண்டார். அவர்தான் சக்கேயு! இயேசு அவரது வீட்டுக்கு விருந்துண்ணச் சென்றபோது, சக்கேயு எழுந்து நின்று, ஆண்டவரே, என் உடமைகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுத்து விடுகிறேன். எவர்மீதாவது பொய்க்குற்றம் சுமத்தி, எதையாவது கவர்ந்திருந்தால் நான் அதை நான்கு மடங்காகத் திருப்பிக் கொடுத்துவிடுகிறேன் என்றார். இயேசு இன்று இந்த வீட்டிற்கு மீட்பு உண்டாயிற்று என்றார் (லூக் 19:8-9).

கொடுப்பதற்கு செல்வம் இருக்கவேண்டும் என்ற அவசியமில்லை. நல்ல மனம்தான் வேண்டும்.



கொடுப்பது, பகிர்வது, இழப்பது இவையே செபத்தின் சிறந்த செயல் வடிவங்களாகும். கொடுப்பதைப் பற்றி இயேசு வலிமையாகப் பேசியிருக்கிறார். கொடுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும். அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படியாக நன்றாய் அளந்து உங்கள் மடியில் போடுவார்கள் (லூக் 6:38) என்பது அவரது அருள்வாக்கு.

நிலைவாழ்வைப் பெற விரும்பிய செல்வம் நிறைந்த மனிதர் இயேசுவிடம் வந்து சிறுவயது முதலே கட்டளைகளை எல்லாம் தாம் கடைப்பிடித்து வருவதாகச் சொன்னபோது, இயேசு அவரை அன்புடன் உற்றுநோக்கினார். உமக்கு இன்னும் ஒன்று குறைபடுகிறது. நீர்போய் உம்மிடம் உள்ளவற்றை விற்று ஏழைகளுக்குக் கொடும். அப்போது விண்ணகத்தில் நீர் செல்வராய் இருப்பீர் (மாற் 10:21) என்று மொழிந்தார்.

எனவேதான், வறுமையுற்ற ஒரு கைம்பெண்ணின் எளிய காணிக்கையை இயேசு பாராட்டினார். வறுமையில் வாடிய கைம்பெண் இரண்டு காசுகளைக் காணிக்கைப் பெட்டியில் போடுவதை இயேசு கண்டபோது, அவரைப் பாராட்டினார். இந்த ஏழைக் கைம்பெண் எல்லாரையும்விட மிகுதியான செல்வத்திலிருந்து காணிக்கைப் போட்டார். இவரோ தமக்குப் பற்றாக்குறை இருந்தும் தம் பிழைப்புக்காக வைத்திருந்த எல்லாவற்றையுமே போட்டுவிட்டார்.

தீர்ப்பு நாளில் நம்மிடம் கணக்குக் கேட்கும் நடுவர் கேட்பது, “என்ன செபித்தீர்கள்?” என்பதல்ல, என்ன கொடுத்தீர்கள் என்பதுதான் என்றார் இயேசு. இறையாட்சியை உரிமையாக்கிக் கொள்வோரைப் பார்த்து அவர் சொல்வது, நான் பசியாய் இருந்தேன். நீங்கள் உணவு கொடுத்தீர்கள். தாகமாய் இருந்தேன், என் தாகத்தைத் தணித்தீர்கள். அன்னியனாக இருந்தேன், என்னை ஏற்றுக்கொண்டீர்கள் (மத் 25:35) என்பதுதான். இறையாட்சியை இழந்தவர்கள் செய்த தவறு என்ன? நான் பசியாய் இருந்தேன். நீங்கள் எனக்கு உணவு கொடுக்கவில்லை (மத் 25:42) என்பதுதானே!

செபவாழ்வில் நிறைவு காண விரும்புபவர் செய்ய வேண்டிய கடைசிச் செயல் கொடுத்தலே. சில வேளைகளில் அது உயிரைக் கொடுத்தலாகவும் இருக்கலாம். உயிர் கொடுத்தலைப் பற்றியும் இயேசு அருமையான செய்திகளைச் சொல்லியிருக்கிறார். நல்ல ஆயர் தம் ஆடுகளுக்காகத் தம் உயிரைக் கொடுப்பார் (யோவா 10:11) என்ற இயேசு, அதனைத் தம் வாழ்வில் நிகழ்த்திக் காட்டினார்.

அன்பு என்றாலே கொடுத்தல்தான். எனவேதான், கிறிஸ்து நமக்காகத் தம் உயிரைக் கொடுத்தார். இதனால், அன்பு இன்னதென்று அறிந்துகொண்டோம். ஆகவே, நாமும் நம் சகோதர சகோதரிகளுக்காக உயிரைக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறோம் (1 யோவா 3:16) என்றார் அன்பின் சீடர் யோவான். அன்பின் சிகரம் கொடுத்தல், பகிர்தல், இழத்தலே. அதனைச் செய்ய முன்வருவோர் இறைவனுக்கேற்ற மிகச் சிறந்த சான்றுகள். தொடக்கத் திருச்சபையினர் அவ்வாறுதான் சான்று பகர்ந்தனர் என்று திருத்தூதர் பணிகள் நூ-லில் வாசிக்கிறோம். தேவையில் உழல்வோர் எவரும் அவர்களிடையே காணப்படவில்லை. நில புலன்களை அல்லது வீடுகளை உடையோர் அவற்றை விற்று அந்தத் தொகையைக் கொண்டுவந்து திருத்தூ தருடைய காலடியில் வைப்பர். அது அவரவர் தேவைக்குத் தக்கவாறு பகிர்ந்து கொடுக்கப்படும் (தி.ப 4:35). இதுவே மிகச் சிறந்த செபம், ஆன்மீகம், சான்று வாழ்வு! இத்தகைய மரபில் வந்த கிறிஸ்தவர்கள் அதைத் தொடர்ந்து கடைப்பிடிக்கும்படித் தமது மடல்களில் வலியுறுத்தினார் பவுலடியார். வறுமையுள்ள இறைமக்களோடு உங்களிடம் உள்ளதைப் பகிர்ந்து கொள்ளுங்கள். விருந்தோம்பலில் கருத்தாயிருங்கள் (உரோ 12:13) என்றார் அவர். பகிர்ந்து வாழ்வதைப் “பலி வாழ்வு” என்றே அழைக்கிறது எபிரேயர் திருமடல். நன்மை செய்யவும், பகிர்ந்து வாழவும் மறவாதீர்கள். இவ்வகைப் பலிகளே கடவுளுக்கு உகந்தவை (எபி 13:16) என்று வாசிக்கிறோம்.

செபிப்பதில் மனநிலை முதன்மைப் பங்கு வகிப்பதுபோல, கொடுப்பதிலும் மனநிலை பெரும்பங்கு ஆற்றுகிறது. மன வருத்தத்தோடோ, கட்டாயத்தினாலோ கொடுக்கவேண்டாம். முக மலர்ச்சியோடு கொடுப்பவரே கடவுளின் அன்புக்கு உரியவர் (2கொரி 9:7) என்கிறார் பவுலடியார். அதுபோல, ஆர்வத்தோடு கொடுத்தால், தம் நிலைக்கேற்றவாறு எவ்வளவு கொடுத்தாலும் அது இறைவனுக்கு ஏற்புடையதாகும் (2கொரி 8:12) என்னும் இறைவாக்கின்படி, கொடுப்பதில் அளவு பெரிதல்ல, ஆர்வமே பெரிது எனக் காண்கிறோம்.

உங்களிடம் கேட்கிறவருக்குக் கொடுங்கள். கடன் வாங்க விரும்புகிறவருக்கு முகம் கோணாதீர்கள் (மத் 5:42) என்றார் இயேசு. கடன் கொடுக்கும்போதுகூட முகம் கோணாமல் கொடுக்கவேண்டும் என்று இயேசு ஒருவர்தாம் சொல்லமுடியும். அவரே நல்லவர் தம் உள்ளமாகிய நல்ல கருவூலத்திலிருந்து நல்லவற்றை எடுத்துக் கொடுப்பார் (லூக் 6:45) என்றார். செப வாழ்வின் நிறைவு கொடுத்தலில்தான் இருக்கிறது என்பதை உணர்ந்து உளமார, மகிழ்வோடு கொடுப-போம், பகிர்வோம், இழப்பதில் இன்பம் காண்போம்.

தொடரும்

# அன்னை மரியாயின் அமல இதயம்

இயேசுவின் திரு இருதயப் பெருவிழாவிற்கு (ஜுன் 07) அடுத்த நாள் அன்னை மரியின் மாசற்ற இதயத்தின் திருவிழாவை நம் திருஅவை கொண்டாடி மகிழ்கின்றது.

**இயேசுவின் திரு இருதயமும், மரியின் மாசற்ற இருதயமும் ஒன்றே. இயேசுவின் முடிவில்லா அன்பின் பிள்ளைகள்**

என்று புனித யூட்ஸ் அருளப்பர் இருபத்தியாறு ஆண்டுகள் ஆய்வு செய்து கண்டுப்பிடித்தார். மரியாளின் மாசற்ற இருதயப் பக்தியை வலியுறுத்தி விழாக்கொண்டாட திருத்தந்தையிடம் அனுமதி பெற்றவரும் இவரே.

திருத்தந்தை 10ம் பத்திநாதர் இப்புனிதரை இயேசு - மரியா திரு இருதயப் பக்தியின் தந்தை அறிஞர், திருதூதர் என்று அழைத்தார்.



1917ம் ஆண்டு 13 அன்று பாத்திமாவில் அன்னை, சிறுமி, லூசியாவிற்கு அருளிய இரண்டாம் காட்சியில் அன்னையின் வலது உள்ளங்கையில்,

**மனிதகுலப் பாவங்களால் துன்புறுத்தப்படும் மரியாவின் மாசற்ற இதயம் அது என்றும், பாவப்பரிகாரம், செய்யப்பட அன்னை விரும்புகிறாா்**

என்றும் பாத்திமா அன்னை சிறுமி லூசியாவுக்கு கூறியுள் ளாா்.

மேலும் 1925, டிசம்பா் 10 அன்று டோரத்தி கன்னியா் இல்லத்தில் அருட்சகோதரி லூசியா இருந்தபோது அன்னை மரியா தோன்றி லூசியாவிடம்

**என் மகளே, நன்றியற்ற மனிதா்கள் தங்கள், அவதூறுகளாலும் நன்றியற்ற தன்மையாலும் ஒவ்வொரு நொடியும், குத்துகிற முட்களால் சூழப்பட்ட என் இதயத்தைப் பாா். நீயாவது எனக்கு ஆறுதலளிக்க முயற்சி எடு. உலகத்திற்குத் தெரியப்படுத்து. தொடா்ச்சியாக ஐந்து முதல் சனிக்கிழமைகளில் எனக்கு நிந்தனைப் பரிகாரம் செய்யும் நோக்கத்துடன் ஒப்புரவு அருட்சாதனம் பெற்று நற்கருணை உட்கொண்டு ஐம்பத்து மூன்று மணி செபமாலை செபித்து, தேவ இரகசியங்களைத் தியானித்தவாறு கால் மணி நேரமாவது என்னுடன் ஒன்றிப்பவா்களுக்கு மரண வேளையில் மீட்புக்குத் தேவையான அனைத்து அருள் வரங்களையும் பொழிந்து உதவி செய்வேன் என்று நான் வாக்களிக்கிறேன்**

என்று கூறியுள்ளாா்.

எதற்காக நம் அன்னைக்கு ஐந்து முதல் சனிக்கிழமை பக்தி முயற்சிகள் கடைப்பிடிக்க வேண்டும்? என்று லூசியாவின் ஆன்ம குரு, கொள்சாலஸ் கேட்டாா். 1930, மே மாதம் 29 - 30 அன்று இரவில் இயேசு, லூசியாவுக்குத் தோன்றி சொன்னதாவது....

மரியாவின் மாசற்ற இதயத்திற்கு எதிராக ஐந்து வகை பாவங்கள் இழைக்கப்படுகின்றன.

1. மரியாளின் மாசற்ற அமல உற்பவத்திற்கு எதிரான அவதூறு
2. மரியாவின் கன்னிமைக்கு எதிரான அவதூறு.
3. மரியாயின் தேவ தாய்க்கு எதிரான அவதூறு மேலும் மரியா மனுக்குலத்தின் தாய் என்பதை ஏற்க மறுப்பு.
4. குழந்தைகளின் உள்ளங்களில் மாசற்ற அன்னைக்கெதிராக அலட்சியம்
5. அன்னை மரியாவை அவா் திருஉருவங்களில் பழிப்பவா்கள், பாவங்கள் என்று இவ்வாறு அன்னையின் இதயத்தை நோகச் செய்கின்றனா் என்றாா்.

**மேலும் தூய ஆவியாாின் தூய பத்தினி என்ற நிலையில் அவரோடு தூய்மையில் இணைக்கப்பட்டுள்ளதை அன்னையின் மாசற்ற இதயத்திற்கு எதிரான பாவம் செய்பவா்கள் தூய ஆவியானவருக்கு எதிரானவா்கள். இவா்கள் இம்மையிலும் மறுமையிலும் மன்னிப்பு பெற மாட்டாா்கள்.** (புனித மத் 12:32)

1957 டிசம்பா் 21 அன்று மெசிகோ குரு அகுஸ்தீன் / புலேந்தல் லூசியாவை பேட்டி கண்டாா். பேட்டியில் லூசியா மூன்று உண்மைகளை வெளிப்படுத்தினாா்.

1. அலகை தூய கன்னி மரியாவுக்கு எதிராக ஓா் இறுதிப்போரில் இறங்கியுள்ளான். தி.வெ.12) இப்போரில் நாம் அனைவரும் பங்கு பெறுகிறோம். ஒரு பக்கம் வெற்றி, மறு பக்கம் தோல்வி கடவுளைச் சாா்ந்த அணி அல்லது அலகையைச் சோ்ந்த அணி. நாம் எந்த அணியில் தீா்மானித்துக்கொள்வோம்.
2. உலகத்திற்கு கடவுள் இறுதியாக இரு வழி முறைகளை மீட்படையத் தருகின்றாா். அவை;
   01. செபமாலை
   02. மரியாயின் மாசற்ற இருதயம்.

   இவையன்றி மனித குல மீட்பிற்கு வேறு தரப்படமாட்டாது.
3. எல்லா அருட்சாதனங்களையும், மனித குல மீட்புக்காக கடவுள் கொடுத்தும் அவை அனைத்தையும், அலட்சியம் செய்ததால் இறுதியாக மரியாயின் மாசற்ற இதயத்தை தருகின்றாா். இந்த கடைசி உபாயமும், நம்மால் வெறுத்து ஒதுக்கப்படுமெனில் விண்ணகத்திலிருந்து எந்த மன்னிப்பும் வராது. தெரிந்தும் இறையன்பை ஏற்றுக்கொள்ளாமல் தள்ளி விடுவது தூய ஆவியானவருக்கு எதிரான பாவம்.

இன்று விண்ணகத்தில் அன்னையோடு வீற்றிருக்கும் லூசியா;

**அன்னையை இரக்கத்தின் இருக்கையாகவும், நன்மைத்தனத்திற்கும், மன்னிப்பிற்கும்,இருப்பிடமாகவும், ஏற்றுக்கொண்டு அன்னை மரியாவின் மீது பக்தி மிக்கவா்களாக வாழ்வதே மரியாயின் மாசற்ற இதயப் பக்தியாகும்**

என்கிறாா். ‘தம் வாழ்வில் நடந்த நிகழ்ச்சிகளை எல்லாம் தம் உள்ளத்தில் பதித்து சிந்தித்து வந்தாா். (புனித. லூக் 19:5) இதுவே அவா் தம் இதயத்தை மாசற்ற இதயமாக வைத்திருப்பதற்காக மேற்கொண்ட வழிமுறை. எனவே நாமும், நம் வாழ்வில் நடக்கின்ற துன்பம், துயரம்,மகிழ்ச்சி, கண்ணீா், சுகம், துக்கம், நோய் போன்ற எல்லா நிகழ்வுகளையும், நோ்மறை அனுபவமாக ஏற்கத் தெரிந்தவள் தான். நாம் நம் உள்ளத்தை மரியாயைப் போல் கசப்பற்றதாக, இறைவனுக்கு ஏற்புடையதாக கலந்திருக்க முடியும். விண்ணகம் செல்வற்கு உறுதி செய்யப்பட்ட வழியான மாதாவின் இதயப் பக்தியை அனுசரித்து, வாழ்வோம். இறுதி நாளில் இயேசு மற்றும் மாதாவின் இதயத்தின் அருகில் அமரும் வாய்ப்பாகப் பெறுவோம்.

மரியாவின் மாசற்ற திரு இருதயமே என் இரட்சணியமாயிரும். (300 நாள் பலன்)

**இறுதியாக மரியாயின் மாசற்ற இதயத்தை தருகின்றாா். இந்த கடைசி உபாயமும், நம்மால் வெறுத்து ஒதுக்கப்படுமெனில் விண்ணகத்திலிருந்து எந்த மன்னிப்பும் வராது...!**

## இறைபணியில் நான் கண்ட அருட்தந்தை
## இயூஜின் பெனடிக்ற் [அ.ம.தி] அடிகளாா்



திருகோணமலை மாவட்டத்தின் மூதூா் மண்ணில் வைத்தி பெனடிக் அன்னேசியா எக்னஸ் தம்பதிகளின் அன்பு புதல்வரான அருட்தந்தை “இயூஜின் பெனடிக்ற்” தன்னுடைய துறவற அா்ப்பண வாழ்வில் 25 வருடங்களையும் குருத்துவ வாழ்வில் 23 வருடங்களையும் பதுளை மறைமாவட்டத்தில் 15 வருடமாகவும் ஆன்மீக, சமூக பணிகளை மேற்கொண்டு கடந்த மே மாதம் 10 ம் திகதி பதுளை மறை மாவட்டத்தில் இருந்து மாற்றலாகிச் சென்றாா்.

அன்று நம் ஆண்டவா் இயேசு கிறிஸ்து இவ் உலகத்திற்கு வந்தது சமூகத்தில் உயா்ந்த ஸ்தானத்தில் உள்ளவா்களையோ, செல்வந்தா்களையோ, பணம் படைத்தவா்களையோ, படித்தவா்களையோ தேடி அல்ல மாறாக இயேசு எம்மை போன்ற ஏழைகளையும், பாவிகளையும், பலவீனமானவா்களையும், கடவுளிடம் வர தடுக்கப்பட்டவா்களையும், நசுக்கப்பட்டவா்களையும், ஒடுக்கப்பட்டவா்களையுமே தேடி வந்தாா்.

அவ்வாறே இயூஜின் அடிகளாரும் மட்டக்களப்பில் அமலமரித்தியாகிகள் சபையின் குருவாக திரு நிலைப்படுத்தப்பட்டாலும் மலையக மண்ணின் இந்த ஏழை எளிய மக்கள் மீது கரிசனை கொண்டு தன் பணியை மலையக மண்ணில் செய்ய முன் வந்தாா். இவா் பதுளை மறை மாவட்டத்தில் ஹப்புதளை பங்கு தந்தையாக சுமாா் ஆறரை வருடங்களுக்கு மேலாகவும் லுனுகலை பங்கில் சுமாா் எட்டு வருடகாலமாகவும் பங்கு தந்தையாக இருந்தாா். இவா் பணியாற்றிய காலம் அப்பங்குகளின் பொன்னான காலமாக இருந்தது. ஆன்மீக பணியோடு நின்று விடாது அம்மக்களின் சமூக மேம்பாட்டிற்காக அயராது பாடுபட்டாா்.

மலையக மக்கள் வாழையடி வாழையாக தேயிலை தோட்டங்களிலே அடிமைகளாக வாழ்வதை விடுத்து சமூகத்தில் உயா்வடைய வேண்டும் என்பதோடு அவா்கள் சாா்ந்த சமூகத்தின் வாழ்க்கை தரம், கல்வியில் உயா் தன்மையினை அடைய வேண்டும் என்று தமது பணிகளை புரிந்தாா். தனிப்பட்ட முறையில் தன் உறவுகளிடமிருந்து உதவிகளை பெற்று பிள்ளைகளின் கல்வி வளா்ச்சிக்காக நேரடியாகவும் மறைமுகமாகவும் உதவிகள் செய்துள்ளாா். இதன் நிமித்தம் இன்று இந்த ஏழை பெற்றோரின் பிள்ளைகள் அதிகமானவா்கள் ஆசிரியா்களாகவும், அரச ஊழியா்களாகவும், சட்டத்தரணியாகவும், வைத்தியராகவும் பல்கலைகழகங்களில் கலை, வைத்திய, பொறியியல் பீடங்களில் மாணவா்களாகவும் இருக்கின்றாா்கள். இவை எண்ணிலடங்காதவை, எடுத்து சொல்ல முடியாதவை அந்த மக்களாலும் எங்களாலும் மறக்க முடியாதவை.

அதுமட்டுமன்றி தமிழ் இலக்கிய ஆா்வம் கொண்ட இவா் எமது பதுளை மறை மாவட்டத்திலிருந்து வெளியாகும் தமிழ் கத்தோலிக்க பத்திரிகையான “நீரோடை” பத்திரிகையின் ஆசிரியராக 14 வருடங்கள் பணிபுரிந்தாா். பௌத்த, இந்து, இஸ்லாமிய மதத் தலைவா்களோடு இணைந்து சமய நல்லினக்கத்திற்காகவும் சக வாழ்விற்காகவும் இயேசுவின் வாா்த்தை வழியாக செயல்பட்டாா். நான் கண்ட பெனடிக் இயூஜின் அடிகளாா் எமது மறை மாவட்ட ஆயா் அதி வணக்கத்திற்குரிய வின்ஸ்டன் பொ்னான்டோ ஆண்டகைக்கு கீழ்படிந்து அவரோடு நெருக்கமான உறவை வைத்திருந்தாா்.

கத்தோலிக்க குடும்பங்கள் குட்டி திருச்சபையாக திருக்குடும்பமாக மாற வேண்டும். வாழ வேண்டுமென்ற வாஞ்சையுடன் இருந்தாா். மறைமாவட்டத்தின் குருமுதல்வா் முதல் அனைத்து அருட்தந்தைகளுடனும், அருட் சகோதரிகளுடனும் நல்லுறவு கொண்டிருந்தாா். மறைமாவட்டத்திலிருந்தும் சரி தேசிய ரீதியிலும் சரி நடைபெறும் நிகழ்வுகளின் தான் சாா்ந்த பங்கின் பங்களிப்பை காணக்கூடியதாக இருந்தது. மேலும் மறைமாவட்ட மேய்ப்பு பணியகம், குடும்ப பணியகம், கத்தோலிக்க ஆசிரியா் ஒன்றியம், மரியாயின் சேனை, மறை மாவட்ட இளைஞா்கள் மன்றம் போன்றவற்றிற்கு தலைமைத்துவமும் பங்களிப்பும் செய்தாா். அது மட்டுமன்றி ஆன்மீக ரீதியில் இம் மக்களை எவ்வகையிலும் இறைவன்பால் ஈா்க்கப்பட வேண்டும் என்பதற்காக பொது நிலையினராகிய உயிா்த்த ஆண்டவா் சமூகத்தினரால்...

15ம் பக்கம்

## 01 ஹுனுப்பிட்டி...

இந்நிகழ்வில் கங்காராம விகாரையின் வண.இறிந்தே அஸ்ஸஜி அவர்களின் தலைமையில் விகாரையின் துணை அமைப்பாளர், அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை உரையாற்றுவதையும் கொழும்பு மறைமாவட்ட பொருளாளர் அருட்தந்தை ஜுட் சமந்த அவர்களும், மறைமாவட்ட நிர்வாகி அருட்தந்தை டெனின்டன் சுபசிங்க அவர்களையும் காணலாம்.

## 01 பேராயருக்கு...

கொழும்பு உயர் மறைமாவட்ட அதிமேதகு. மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகைக்கு “அமைதிக்கான” விருது சத்ய கவேசனய அமைப்பின் வழக்கறிஞர் நலின் சமரகோன் அவர்களினால், ஆண்டகைக்கு வழங்கப்பட்டது. அவ்வமைப்பின் ஆலோசகர் வண. தரணிகல பதும, அமைப்பின் கட்டளையாளர் சட்ட அறிஞர் பிமேநாத் தொடவத்த அவர்களும் இன்னும் சட்டவல்லுனர்களும் கலந்து சிறப்பித்தனர்.

**தகவல் : T. சுனில் பர்னாந்து**

## 02 மன்னார் மறைமாவட்ட...

மரணத்தை நினைவு கூரும் இவ்வாண்டில், மன்னார் மறைமாவட்டத்தில் 5 இறைபணியாளர்கள் பணிக்குருக்களாகத் திருநிலைப்படுத்தப்பட்டுள்ளார்கள். இது இறைவன் அருட்பணியாளர்களால் நம் மறைமாவட்டத்தை வளப்படுத்துகின்றார் என்பதை எடுத்துக்காட்டுகின்றது.

கடந்த 23.05.2019 வியாழக்கிழமை கற்கிடந்தகுளம் பங்கின் இசைமாலைத்தாழ்வு புனித பிலிப் நேரியார் ஆலயத்தைச் சேர்ந்த அருட்சகோ. லூர்து நாயகம் ஜெஸ்மன்றாஜ் மறைமாவட்டக் குருவாகவும், காத்தான்குளம் பங்கின் பாலையடிப்புதுக்குளம் புனித செபமாலை மாதா ஆலயத்தைச் சேர்ந்த அருட்சகோ. சந்தியோகு வின்சென்ற் மைக்கல், மற்றும் நானாட்டான் பங்கின் பள்ளங்கோட்டை புனித அந்தோனியார் ஆலயத்தைச் சேர்ந்த அருட்சகோ.வேதநாயகம் அனுசியஸ் ஆகியோர் யாழ் மாகாண அமலமரித்தியாகிகளின் துறவற சபைக் குருக்களாகவும், யோசேவ் வாஸ் நகர் தூய நற்கருணை நாதர் பங்கு ஆலயத்தைச் சேர்ந்த அருட்சகோ. பிரான்சிஸ் மைக்கல் யூட்லஸ் சோமஸ்கன் துறவற சபை அருட்பணியார்களாவும் மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி பி.ல.இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை அவர்களால் பணிக்குருக்களாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்கள். இத்தோடு வங்கலை புனித ஆனாள் பங்கு ஆலயத்தைச் சேர்ந்த அருட்சகோ. யூலியஸ் மில்றாஜ் றெவல் அவர்கள் கடந்த மாதம் கண்டி மறைமாவட்டத்தில் நற்கருணை நாதர் துறவறை சபை அருட்பணியாளராக அருட்பொழிவு செய்யப்பட்டார். இவர் வங்காலைப் பங்கிலிருந்து இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட 36வது அருட்பணியாளராவார். இவர் தமது முதல் திருப்பலியை 12.05.2019 வங்காலை புனித ஆனாள் ஆலயத்தில் நிறைவேற்றினார்.

## 14 இறைபணியில்...

நடாத்தப்படும் புகழ்ச்சி ஆராதனையுடன் கூடிய குணமாக்கும் வழிபாட்டினை தன் பங்கில் கடந்த எட்டு வருடங்கள் நடாத்த பூரண ஒத்துழைப்பு நல்கினார். தன்னுடைய இளமைத்துடிப்புள்ள 15 வருடங்களையும் எமது மலையக மக்களுக்காக அர்ப்பணித்தவர். நேரத்திற்கு உணவின்றி, உறக்கம் இன்றி ஓய்வு இன்றி தன் பணியை சரிவர செய்தார். அருட்தந்தையரே உங்களின் கனிவான சிரிப்பு, கணீர் என்கின்ற குரல், கம்பீரமான நடை என்பன ஒருபோதும் மறக்க முடியாது. நீங்கள் என்றும் எங்கள் நெஞ்சங்களில் வாழ்ந்துகொண்டிருப்பீர்கள் நாங்கள் அகக் கண்களால் உங்களை காண்போம்.

நீங்கள் பணி செய்த காலங்கள் எங்களால் எப்போதும் மறக்க முடியாது. உங்கள் இடமாற்றம் எம் மறை மாவட்டத்திற்கு பேரிழப்பாகும். உங்களின் வெற்றிடத்தை நிரப்புவது மிகக் கடினம். தனிப்பட்ட ரீதியில் நீங்கள் எனக்கு நல்ல ஆன்மீக தந்தையாக, நல்ல ஆலோசகராக, சகோதரராக, நண்பராக இருந்தீர்கள். நீங்கள் செல்லும் புதிய இடத்தில் எத்தனையோ சவால்களுக்கு முகம் கொடுக்க நேரிடும்.

விஷேடமாக உங்கள் புதிய பணி சிறக்க உங்களுக்கு தேவையான உடல், உள நலத்தையும் தூய ஆவியின் வல்லமையும் நிறைவாக பெற்றிட தேவ தாயிடம் பரிந்துரை செய்யும்படி வேண்டுவதுடன் எம்மக்களின் அனுதின செபத்தில் நீங்களும் இருப்பீர்கள். இவ் இறை வார்த்தைகள் வழியாக வாழ்த்துகிறோம்.

கிறிஸ்து இயேசுவின் வழியாக நீங்கள் பெற்றுக்கொண்ட இறையருளை முன்னிட்டு உங்களை நினைத்து என் கடவுளுக்கு என்றும் நன்றி செலுத்துகிறேன். ஏனெனில் நீங்கள் கிறிஸ்துவுடன் இணைக்கப்பெற்றுச் சொல்வன்மையும் நிறையறிவும் பெற்று எல்லா வகையிலும் செல்வர்களானீர்கள். மேலும் கிறிஸ்துவை பற்றிய சான்று உங்களால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வெளிப்படுவதற்காகக் காத்திருக்கும் உங்களுக்கு அருள்கொடை எதிலும் குறையே இல்லை. நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வெளிப்படும் நாளில் நீங்கள் குறைச் சொல்லுக்கு ஆளாகாதிருக்க அவர் உங்களை இறுதிவரை உறுதிப்படுத்துவார். 1. கொரிந்தியர் 1 (4-8 வரை)

**எஸ். துரைராஜா பதுளை மறைமாவட்ட மேய்ப்பு பணியக செயலாளர், புனித மரியாள் பேராலயம் – பதுளை**

## 03 கிறிஸ்தவம் என்பது...

விளையாட்டு மைதானத்திற்கு இரவு நேர விளக்குகளாக பயன்படுத்தப்பட்டார்கள், விலங்கு உரோமங்களை போர்த்தி கிறிஸ்தவர்களை இராயாக்கினார்கள். இவ்வாறு தொடர்ந்து கிறிஸ்தவர்களுக்கான துன்புறுத்தல் இக்காலத்தில் பேதுரு, பவுல் போன்றோரின் மரணத்தையும் எதிர்கொண்டது. அன்று தொடங்கிய வேதகலாபனை காலங்களில் கிறிஸ்துதவம் துன்புற்றது. பலர் தமது உயிரை தியாகம் செய்தார்கள். பலர் தாமாக முன்வந்து கிறிஸ்துவுக்காக தமது உயிரை கொடுத்தார்கள். இன்று அந்த உயிர்களின் மூலமாகதான் கிறிஸ்தவம் இன்றளவும் நிலைபெற்றுள்ளது.

இலங்கை தாய் திருநாட்டை பொறுத்தமட்டிலும் கூட கி.பி 1505ம் ஆண்டு போர்த்துக்கேயர் காலத்தில் கிறிஸ்தவம் தலைதூக்கி இருந்தாலும், அதன்பின் ஒல்லாந்தர், ஆங்கிலேயரின் காலத்தில் பெரிதும் துன்பத்திற்குள்ளாகியது. இந்த வரலாற்றையும் நாம் அறிவோம். அன்றைய காலங்களில் திருப்பலி இன்றி, அருளடையாளங்கள் இன்றி மக்கள் பரிதவித்த காலத்தில் புனித யோசேவ்வாஸ் போன்ற பணியாளர் இரகசியமாக பணி புரிந்ததையும் நாம் அறிவோம். இவ்வாறு துன்புறுத்தப்பட்ட கிறிஸ்தவர்களின் அழியாத, நிலையான விசுவாசத்தின் காரணமாக தான் நாம் இன்று சிலுவையை தூக்கிச் செல்லும் மக்களாக இருக்கின்றோம்.

எத்தனை துன்பம் வந்தபோதும் நாம் துவண்டு விடக்கூடாது. எமது விசுவாசத்தை இழந்து விடவும் கூடாது. காரணம் இயேசுவின் பொன்மொழிகள் இன்றளவும் ஒலிக்கின்றன. “இதோ! உலக முடிவுவரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கின்றேன்” (மத் 28:20). இந்த இறைவாக்கு வழங்கிய கிறிஸ்து இன்றளவும் பயணிக்கின்றார். காரணம் இத்தனை துன்பங்களை கண்ட கிறிஸ்தவ மதம் துன்பத்தின் மதமாக இல்லாமல் மீட்பின், மகிழ்ச்சியின் மதமாக இருக்கின்றது. மக்களின் விசுவாசம் குறைவுபடவில்லை. கிறிஸ்துவுக்காக வாழ்வை தியாகம் செய்பவர்களும் குறைவுபடவில்லை. காரணம் “வேதசாட்சிகளின் மரணம் தான் கிறிஸ்தவத்தின் வித்தாகின்றது” இலங்கை நாட்டின் வேதசாட்சிகள் தான் பாஸ்கா ஞாயிறன்று மரித்தவர்கள். இவர்கள் வாழ்வு இன்று கிறிஸ்தவ மதத்தின் ஒரு வித்தாக அமைந்துள்ளது. இந்த மரணத்தின் வழியாக கிறிஸ்தவ மதமும் அவர்களின் முடிவில்லா வாழ்வில் பங்கு கொள்கின்றது. எம்மையும் பங்கு கொள்ள அழைக்கின்றது.

## 12 எந்த ஒரு மனிதரும்...

### சிறிய நோயாளிகள்

கருவில் வளரும் குழந்தைகள், சிறிய நோயாளிகள் என்றும், மருந்துகள் பற்றிய ஆய்வு மற்றும், அறுவை சிகிச்சையில் இடம்பெறும் முன்னேற்றங்கள், தானாக முன்வந்து கருக்கலைப்பு செய்வதற்கும், கடும் நோய்களோடு பிறக்கும் பல சிறார், பிறப்பின்போது அக்கறை காட்டப்படாமல் இருப்பதற்கும் காரணமாகின்றன என்றும் திருத்தந்தை கூறினார்.

மருத்துவர்களின் பங்கு பற்றியும் உரையாற்றிய திருத்தந்தை, மருத்துவம் ஒரு மறைப்பணியாகும், ஒவ்வொரு மனிதரின் வாழ்வின் மாண்பை மதிக்கும் முறையில், தீர்வுகள் காணப்பட வேண்டும் என்றும் உரைத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

கருக்கலைப்பு ஒருபோதும் தீர்வாகாது, மனித வாழ்வு புனிதமானது, எனவே, சில காரணங்களுக்காக, கருவில் வளரும் குழந்தையைப் பரிசோதிப்பது தவிர்க்கப்பட வேண்டும், ஏனெனில், இது, குடும்பங்கள், தங்களின் வலுவிழந்த குழந்தைகளை வரவேற்று, அரவணைத்து, அன்புகூரும் அனுபவத்தைப் பறித்துக் கொள்கின்றது என்று கூறினார். “வாழ்வுக்கு ஆகட்டும்!, வாழ்வை அதன் வலுவின்மையில் சிறந்த கொடையாகப் பராமரிப்பது” என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கை இணைந்து நடத்திய “Heart in a Drop” அறக்கட்டளை, மிக வலுவற்ற நிலைகளில் பிறக்கும் குழந்தைகளை ஏற்பதற்காக உழைத்து வருகிறது.

## 12 உலக மயமாக்கப்பட்டு...

ஏனெனில் மனித குலம் என்பது, நம் அயலார்களுடனான கருணை உள்ளத்தால் பிணைக்கப்படவேண்டியது எனவும் கூறும் திருத்தந்தையின் செய்தி, இது புலம்பெயர்ந்தோரைப் பற்றியது அல்ல, மாறாக, எவரும் புறக்கணிக்கப்படுவதில்லை என்பதை உறுதி செய்வதற்குரியது எனவும் கூறுகிறது.

இது புலம்பெயர்ந்தோரைப்பற்றி மட்டுமல்ல, மாறாக, கடை நிலையில் இருப்போரை முதலிடத்திற்கு கொணர்வது, இறைவனின் கொடைகளை அனைவரும் முழுமையாகப் பெறவேண்டும் என எண்ணும் மக்கள் குலத்தைக் கொண்டது, கடவுளையும் மனிதரையும் உள்ளடக்கிய ஒரு நகரைக் கட்டியெழுப்புவதைப் பற்றியது என, புலம்பெயர்ந்தோர் உலக நாள் குறித்து, பல்வேறு தலைப்புக்களில், தன் கருத்துக்களை அச்செய்தியில் வெளியிட்டுள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ்.


## தொழில்

மத்துகம பொயிலர் கோழி பண்ணைக்கு ஆண் / பெண் தேவை. கிராம சேவையாளர் பத்திரமும், அருட்தந்தையின் கடிதமும் தேவை. தொ. பேசி இல **071-1231436, 077-3618601** (8145)





## மணமகள் தேவை

கொழும்பு றோமன் கத்தோலிக்க 1989ம் ஆண்டு பிறந்த நற்குணமுடைய மகனுக்கு பெற்றோர்கள் நற்குணமுடைய மணமகளை தேடுகின்றார்கள்.

**தொடர்புகளுக்கு 0777065100, 0112388673, 0765400607** (8207)


## 08 பாப்பரசர்...

பாப்பரசர் தனது வாழ்வை சிறந்த முறையில் கழிப்பதன் ஊடாகவும், முன்மாதிரிகையாகவும், அயலவர்களுடன் அன்புடன் செயற்படுவதினாலும், தங்களின் இதயத்தை சுத்தமான முறையில் மனம்மாற்றுவது போல நித்திய ஒளியில் கழுவிக்கொண்டு இம் மண்ணில் வாழும் புனிதர்களாவதற்கு எமக்கு வரம் கிடைக்கிறது. “அன்பில், என் மனசாட்சியில், இந்த உலகில் உச்சக்கட்டத்தை அடைந்த ஒரு நபராக நான் கடவுளை காண்கின்றேன், அது இறை அன்பை உணர்ந்ததினாலே” இதுவே, இயேசுவின் சிறிய மலர் திரேசா அவர்களின் கூற்று. நாங்கள் அனைவரும் இவ் வரப்பிரசாதத்தை பெறுவதன் மூலம் வாழ்வை ஒளிமயமாக்கிக் கொள்ள, கடல் போன்ற மறைக்கு வெளிச்ச வீடாக கிறிஸ்தவ வாழ்வை ஏற்படுத்திக்கொள்ளுதல் வேண்டும். “காலம் நிறைவேறிவிட்டது. இறையாட்சி நெருங்கி வந்துவிட்டது மனம்மாறி நற்செய்தியை நம்புங்கள்”. (மாற்கு 1:15) எனும் இறைவார்த்தையானது பாப்பரசர் தினத்தை சிறந்த மனமாற்றத்திற்குள் ஒற்றிணைக்கிறது. அத்தோடு எங்கள் நாட்டிலும் சமாதானத்தை மேற்கொண்டு மனமாற்றத்தினூடாக வாழ்வை செயற்படுத்துவோம்.

**உங்கள் அனைவருக்கும் இறையாசீர்!**

## 05 தூய ஆவியானவர்

- ✷ மண்ணுலகத்தை சார்ந்தவற்றில் உள்ள நாட்டம் குறைந்து, மறைந்து விண்ணுலகத்தைச் சார்ந்தவற்றில் ஈடுபாடு வளர்கிறது.
- ✷ தூய ஆவியார் பல கொடைகளாலும், கனிகளாலும் நம்மை நிரப்புகிறார். எடுத்துக்காட்டாக, அயல்மொழியில் பாடித் துதிக்கும் செபக்கொடை, இறைவாக்குரைக்கும் வரம், குணமளிக்கும் வரம், அன்பு, மகிழ்ச்சி, அமைதி போன்ற கனிகள் நமக்குக் கிடைக்கின்றன.
- ✷ நாம் தூய ஆவியாரின் ஏவுதல் படி நடக்க முடிகிறது. அவர் விரும்புவதை நாம் செய்ய முடிகிறது. அவர் வெறுப்பதை நாம் வெறுத்துத்தள்ள முடிகிறது.
- ✷ தூய ஆவியாரால் ஆட்கொள்ளப்பட்டவர்கள் இயேசுவைப் போல் சமூகச் சேவையிலும் ஈடுபடுவர். இயேசு செபம் செய்வதோடு நில்லாமல், மக்களை சந்தித்து அவர்கள் பசியை போக்கினார். நோய்களை குணமாக்கினார். ஒடுக்கப்பட்ட மக்களுக்கு புதுவாழ்வு அளித்தார்.
- ✷ சிலர் தீராத நோயிலிருந்தும் உணர்ச்சிக் கட்டுகளிலிருந்தும் விடுதலை பெறுகின்றனர். எடுத்துக்காட்டாக காசநோய், சர்மநோய், தொழுநோய், பயம், கவலை, குற்றப்பழி உணர்வு, தாழ்வு மனப்பான்மை, கோபம், பகைமை, உணர்ச்சி முதலியன.
- ✷ நற்செய்தியை எங்கும் அறிவிக்க வேண்டும் என்ற தணியாத தாகமும் உற்சாகமும் உண்டாகிறது.
- ✷ எல்லா மக்களையும் மதம், இனம், மொழி, சாதி, நிற வேற்றுமையின்று அன்பு செய்யவும், ஆத்தும பாரத்தோடு பரிந்துரை செய்யவும் கடமை உணர்வும் ஏற்படுகிறது.

## 10 விவிலியப் பகுதி விடைகள்

26. வீட்டின் கூரையை உடைத்துத்திறப்பு உண்டாக்கி கீழே இறக்கினார்கள் (2.4)
27. ‘உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன. நான் உனக்கு சொல்கிறேன், நீ எழுந்து உன்னுடைய படுக்கையை எடுத்துக்கொண்டு உனது வீட்டுக்குப்போ” (2:11)
28. சுங்கச்சாவடியில் (2:14)
29. ‘நோயற்றவர்க்கு அல்ல, நோயுற்றவருக்கே மருத்துவர் தேவை. நேர்மையாளர்களை அல்ல, பாவிளையே அழைக்க வந்தேன்’ என்றார் (2:2:17)
30. மணமகன் அவர்களோடு இருப்பதால்நோன்பு இருக்க தேவையில்லை என்றார் (2:18-19)
31. அபியத்தார் (2:26)
32. தொழுகைக்கூடத்திற்கு சென்றார் (3:1)
33. கைசூம்பியவரிடம்சொன்னார் (3:3)
34. பரிசேயரும், ஏரோதியாரும் (3:6)
35. கலிலேயா (3:7)




அனைத்து விதமான அச்சுப்பதிப்பு தேவைகளையும் சிறப்பான முறையில் செய்துகொள்ள...

மிகக் குறைந்த விலையில் கூடிய சேவைகளைப் பெற்றுக்கொள்ள...

# கொழும்பு கத்தோலிக்க அச்சகம்




## உங்களுக்கான பல்வேறு விதமான சேவைகள்

- நவீன தொழிற்நுட்ப ரீதியில் [ஓப்செட் முறையில்]
- நவீன பிரதியாக்கம் [டுப்ளோ],
- வர்ண போட்டோ பிரதிகள் எடுத்தல் மற்றும் ஸ்கேன் எடுத்தல் பல வணர்ணங்களில் டுப்ளோ பிரதிகள் எடுத்தல்

- பாடற்தாள்கள்
- நினைவு மலர்கள்
- செபப் புத்தகங்கள்
- நவநாள் புத்தகங்கள்
- சிறுகதை புத்தகங்கள்
- பில் புத்தகஙகள்
- ரிசிட் புத்தகங்கள்
- சஞ்சிகைகள்
- சான்றிதழ்கள்
- லெட்டர் ஹெட்ஸ்
- விசிடிங் கார்ட்ஸ்
- ஞாயிறு வழிபாடுகள்
- திருமணம் மற்றும் ஆலயத் திருவிழாக்கள், இறந்தோருக்கான திருப்பலியில் பாடப்படும் பாடற்தாள்கள் ஆகியவையும் அச்சிடப்படும்.

## பல்வேறு விதமான சேவைகளும் அதற்கான விலைகளும்




- திருமண விளம்பரங்களுக்கு 1 தொடக்கம் 15 வரையான சொற்களுக்கு ரூபா 600.00உடம் அதனைத் தொடர்ந்து வரும் ஒவ்வொரு சொற்க-ளுக்கும் ரூபா 10.00 வீதமும் அறவிடப்படும்.
- திருமண விளம்பரங்களை கொடுக்கும்போது கொடுப்பவரது தேசிய அடையாள அட்டை தேவை. எனவே அடையாள அட்டையைக் கொண்டுவரவும்.

**சொற்களின் எண்ணிக்கைகளும், அதற்கான விலைகளும்**

| | | | |
|---|---|---|---|
| 15 | 600/- | 23 | 680/- |
| 16 | 610/- | 24 | 690/- |
| 17 | 620/- | 25 | 700/- |
| 18 | 630/- | 26 | 710/- |
| 19 | 640/- | 27 | 720/- |
| 20 | 650/- | 28 | 730/- |
| 21 | 660/- | 29 | 740/- |
| 22 | 670/- | 30 | 750/- |

உங்களது பிள்ளைகளின் திருமண வரன்களை ஞானஒளியின் மூலம் பெற்றுக்கொள்ள எம்மோடு இணையுங்கள்.


## தொடர்புகொள்ளுங்கள்

இயக்குனர் அருட்தந்தை
கொழும்பு கத்தோலிக்க அச்சகம்
இலக்கம் 02, ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை
கொழும்பு – 08.
தொ.பே இல. 0112695984, 0112678106,
0114614927 பெக்ஸ் – 0112692586
E-mail : cgnanaoli@yahoo.com
www.colomboarchdiocesancatholicpress.com


**பிறந்தநாள், திருமண ஆண்டு, மரண அறிவித்தல், நினைவுநாள், ஏனைய தேவைகள் போன்ற பலவிதமான விளம்பரங்களுக்கு எம்மை நாடவும்.**

**வர்த்தக விளம்பரங்களுக்கான அளவுகளும், விலைகளும்**














| அளவுகள் Single Column | விலைகள் 1 ½" width | அளவுகள் Double Column | விலைகள் 3 ½" Width | அளவுகள் Trible Column | விலைகள் 5" Widthd |
|---|---|---|---|---|---|
| 1" SC | 450/- | 1" DC | 900/- | 1" TC | 1,350/- |
| 1 ½" SC | 675/- | 1 ½" DC | 1,350/- | 1 ½" TC | 2,025/- |
| 2" SC | 900/- | 2" DC | 1,800/- | 2" TC | 2,700/- |
| 2 ½" SC | 1,125/- | 2 ½" DC | 2,250/- | 2 ½" TC | 3,375/- |
| 3" SC | 1,350/- | 3" DC | 2,700/- | 3" TC | 4,050/- |
| 3 ½" SC | 1,575/- | 3 ½" DC | 3,150/- | 3 ½" TC | 4,725/- |
| 4" SC | 1,800/- | 4" DC | 3,600/- | 4" TC | 5,400/- |
| 4 ½" SC | 2,025/- | 4 ½" DC | 4,050/- | 4 ½" TC | 6,075/- |
| 5" SC | 2,250/- | 5" DC | 4,500/- | 5" TC | 6,750/- |
| 5½" SC | 2,475/- | 5½" DC | 4,950/- | 5½" TC | 7,425/- |
| 6" SC | 2,700/- | 6" DC | 5,400/- | 6" TC | 8,100/- |
| 6 ½" SC | 2,925/- | 6 ½" DC | 5,850/- | 6 ½" TC | 8,775/- |
| 7" SC | 3,150/- | 7" DC | 6,300/- | 7" TC | 9,450/- |





| பின்பக்கம் (கலர்) | விலை | உட்பக்கம் (கறுப்பு) | விலை |
|---|---|---|---|
| **ஆலய திருவிழா விளம்பரங்களுக்கான விலைகள்** | | | |
| ¼ பக்கம் | 9,000/- | ¼ பக்கம் | 8,500/- |
| ½ பக்கம் | 18,000/- | ½ பக்கம் | 17,000/- |
| முழுப் பக்கம் | 36,000/- | முழுப் பக்கம் | 34,000/- |
| **வர்த்தக விளம்பரங்களுக்கான விலைகள்** | | | |
| ¼ பக்கம் | 16,875/- | ¼ பக்கம் | 12,500/- |
| ½ பக்கம் | 33,750/- | ½ பக்கம் | 25,000/- |
| முழுப் பக்கம் | 67,500/- | முழுப் பக்கம் | 50,000/- |







அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை K.P. கெமிலஸ் N. பர்னாந்து, இயக்குனர். கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்